536.

ஸ்ரீ:

...வணி-மீ

# ஸ்ரீநருஸிம்ஹப்ரியா

[ஸ்ரீஅஹோபிலமடத்துப் பத்ரிகை]

ஸம்புடம் 10
ஸஞ்சிகை 8

இன்துணைப்பதுமத்து அலர்மகள்தனக்குமின்பன் நற்புவிதனக்கிறைவன்*
தன்துணையாயர்பாவைநப்பின்னை தனக்கிறை மற்றையோர்க்கெல்லாம்
வன்துணை* பஞ்சபாண்டவர்க்காகி வாயுரை தூது சென்றியங்கும்
என்துணை* எந்தைதந்தைதம்மானைத் திருவல்லிக்கேணிக்கண்டேனே.

(பெரியதிருமொழி-2-3-5.)

வர்ஷச் சந்தா ரூபா 3-0-0

தனிப்பிரதி விலை [illegible]-4-0

AUGUST 19[illegible]
Vol. 10 NO. 8

## விஷய ஸூசிகை


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. சாரீரகமும் சரணாகதியும் | ... | 224 |
| 2. பஞ்சாங்க ஸங்க்ரஹம் | ... | 229 |
| 3. ஆஸ்திக்யம் | ... | 230 |
| 4, வாலிவத தத்வம் | ... | 234 |
| 5. ஸதுபதேசம் | ... | 237 |
| 6. புயலும் பொறுமையும் | ... | 242 |
| 7. ஸௌஜந்யபரிமளம் | ... | 246 |
| 8. ஸத்யம் வத | ... | 248 |
| 9. ஸம்பாதகரின் குறிப்புகள் | ... | 252 |
| 10. புஸ்தகங்கள் வரவு | ... | 254 |


ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ப்ரதி இங்கிலீஷ் மாதம் 15-ம் தேதி சந்தாதாரர்களுக்குத் தபாலில் போடப்படுகிறது. ஒவ்வொரு சந்தாதாரருக்கும் ஸஞ்சிகை அனுப்பப்படுகிறதா என்று பார்ப்பதில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் சில சந்தாதாரர்களிடமிருந்து ஸஞ்சிகை கிடைக்கவில்லை என்று கடிதங்கள் வருகின்றன. ப்ரதி இங்கிலீஷ் மாதம் 20-ம் தேதிக்குள் ஸஞ்சிகை கிடைக்காவிட்டால் உடனே சந்தாதாரர்கள் அந்த விஷயத்தைத் தெரிவித்தால் வேறு ஸஞ்சிகை அதற்கடுத்த மாத ஸஞ்சிகையுடன் அனுப்பப்படும். விலாஸ மாறுதல்களை உடனுக்குடன் தெரிவிக்காத காரணத்தால் ஸஞ்சிகை கிடைக்காவிடில் அதற்கு பதில் ஸஞ்சிகை அனுப்பப்படமாட்டாது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 10 } கர ௵ ஆவணி ௴ { ஸஞ்சிகை 8

'அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||'

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

**ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.**

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணைபால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக, வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# சாரீரகமும் சரணாகதியும்

[ஸ்ரீ. உப. மதுராந்தகம் வித்வான், தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, திருவையாறு.]

ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயஸ்தர்கள் அந்தமில் பேரின்பமாகிய மோக்ஷாநந்தத்திற்காக ஶரணாகதியநுஷ்டாநம் செய்துவருவதை நாடுநகரமும் நன்கறியும். பக்தியோகத்திற்கு அபேக்ஷிதமான ஜ்ஞாநமும் சக்தியும் குன்றியிருக்கும் நம்போன்றவர்களுக்கு மோக்ஷோபாயாந்தரமாகிய பக்தியை அநுஷ்டித்தலென்பது நெஞ்சால் நினைப்பரிது. யஜ்ஞாதி கர்மாக்களை அநுஷ்டிப்பதற்கு கல்பஸூத்ரங்கள் கைவிளக்காயிருக்கின்றன. பக்தியோகத்திற்கு அவ்வாறான ப்ரயோகஶாஸ்த்ரங்களுமில்லை. ஸ்ரீமந்நாதமுநிகள் அருளிச்செய்த யோகரஹஸ்யம் என்கிற க்ரந்தமும் அவர் குருகைக்காவலப்பனுக்கு உபதேசம் செய்த யோகப்ரக்ரியையும் லுப்தமாகிவிட்டது. இந்நிலையில் மோக்ஷம் பெறுகைக்கு ஶரணாகதியைத் தவிர்த்து உபாயாந்தரம் ம்ருச்யமாய் நின்றது. ஶரணாகதியை இசையாத வைதிகமதாந்தரங்களில் புண்யகர்மதாரதம்யத்திற்கீடாக ஸ்வர்காதி புண்யலோகங்களைப் பெற்று, புநர்ஜந்மம் பெறவேண்டுமதன்றி ஶாச்வதமான மோக்ஷாநந்தத்தை இச் சரீராவஸாநத்தில் பெற யாதொரு விரகும் காணவில்லை. ஸ்ரீவைஷ்ணவமதமொன்றுக்கே இப்பெருமை அஸாதாரணமாய் காணக்கிடக்கின்றது. ஆகவே ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் நிக்ஷேபரக்ஷை, ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய ப்ரபந்தங்களில் ஶரணாகதியை நிலைநாட்டி இவ்விருள்தருமாஞாலத்தை உய்வித்தருளியிருப்பதை ஸம்ப்ரதாயநிஷ்டர்கள் கையிற்கனிபோலக் காண்கிறார்கள்.

இந்த ஶரணாகதி ஸித்தாந்தத்திற்கு ஶாரீரகஶாஸ்த்ர ஸம்மதியும் ஸ்ரீதேசிகனுக்கு முற்பட்ட ஆசார்யர்கள் ஸம்ப்ரதாயமும், ஸ்ரீபாஷ்யம், வேதார்த்தஸங்க்ரஹம், ச்ருதப்ரகாசிகை போன்ற ஸ்ரீஸூக்திகளில் சிரபரிசயம் பண்ணும் மஹாப்ராஜ்ஞர்களுக்கே நிலமாகும். அந்த அந்த ஸ்ரீஸூக்திகளில் ஆங்காங்கு விசகலிதங்களாய் காணுமவற்றைத் தெளிய வாய்ப்புப் பெறாதவர்களுக்கும் ஒருவாறு பயன்படலாம் என்று எண்ணி இதை எழுத ஆரம்பிக்கிறேன்.

தர்சநஸ்தாபகரான எம்பெருமானார் திருக்கச்சிநம்பிகளிடமிருந்து பேரருளாளன் அருளிய ஆறுவார்த்தைகளைக் கேட்டு உள்மகிழ்ந்து அந் நியமநத்தின்படியே ஸ்ரீவைஷ்ணவதர்சநத்தைப் ப்ரவர்த்தநம் செய்தருளினார் என்பதாக ஸ்ரீவைஷ்ணவர் யாவரும் இசைந்த ஐதிஹ்யமொன்றுண்டு. அவ்வார்த்தைகளாவன:—‘(1) ஸ்ரீமாநான நாராயணனே பரதத்வம். (2) நம்முடைய மதம் பேதம். (3) ப்ரபத்தியே உபாயம். (4) அந்திமஸ்ம்ருதி ஆவச்யகமன்று. (5) சரீராவஸாநத்தில் மோக்ஷம். (6) பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பது என்று. எம்பெருமானாரும் அவற்றைச் சிரமேற்கொண்டு முதலில் ஆறுவது நியமனத்தைத் தலைக்கட்டியருளினார். பிறகு ஸ்ரீபாஷ்யாதிகளான ஒன்பது க்ரந்தங்கள் மூலம் நம்பிபக்கல் ச்ருதங்களான மற்ற ஐந்து அர்த்தங்களையும் ஸ்தாபநம் செய்தருளினார். இவர் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் ஒன்பதிலும் ‘ப்ரபத்தியே உபாயம்’ என்கிற மூன்றாவது அர்த்தவிசேஷமானது ஸ்வாநுஷ்டாநோக்திரூபமாகவோ உபதேசரூபமாகவோ தர்க்கரூபமாகவோ மூன்றிலொரு ப்ரகாரத்தினால் ஐயமறப் பொலிந்து நிற்கின்றது.

வேதத்தின் பூர்வபாகமாகிய கர்மகாண்டத்தில் விஹிதங்களான யஜ்ஞம், தாநம், ஹோமம் முதலிய கர்மாக்களைப்போலவும், உத்தரபாகமான வேதாந்தத்தில் விஹிதங்களான பக்தியோகங்களைப்போலவும், ஶரணாகதியையும் ஸங்கல்ப ஸாத்விகத்யாகாதி புரஸ்ஸரமாக அநுஷ்டாநம் செய்தல் வேண்டும். ‘யஜேத’ ‘ஜுஹுயாத்’ ‘உபாஸீத’ என்றாற்

போல் யாகாதிகர்மங்களுக்குப் பூர்வகாண்டத்தில் விதாநம் காண்கிறது. 'உபாஸீத' 'த்⁴யாயீத' '[illegible]' என்றிவ்வாறாக பக்தியோகங்களுக்கு வேதாந்தங்களில் விதாநமுள்ளது. அவ்வாறாகவே ஶரணாகதிக்கும் விதாநமானது ஸுஸ்பஷ்டமாய் காண்கிறது. 'ஶரணம் வ்ரஜ' 'ஸாதூ⁴நாமபி நிக்ஷிபேத்' 'ப்ரபத்³யேத ஜநார்த³நம்' இத்யாதியாக இதற்கு விதாநமுள்ளது. 'ந்யாஸம் யஷ்டீத' என்பதாக தைத்திரீயச்ருதியிலுமுள்ளது.

புருஷப்ரயத்ந ஸாத்யமாக ஶரணாகதியை இசையாவிடில் உதாஹ்ருதங்களான விதிகள் நிரர்த்தகங்களாகும். ஸ்ரீபாஷ்யத்தில் லகு ஸித்தாந்தத்தின் ஆரம்பத்தில், 'வாக்யார்த்த ஜ்ஞாநமாத்ரத்தாலே மோக்ஷம் ஸித்திப்பதாகில் மோக்ஷார்த்தமாக உபாஸநாவிதிகள் நிரர்த்தகங்களாகப் ப்ரஸங்கிக்கும்' என்று ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்தாபநம் செய்தருளியது ஶரணாகதிவிஷயத்திலும் துல்யமானது. அங்கு உபாஸநவிதிகள் நிரர்த்தகங்களாகிறாப்போலே இங்கும் ஶரணாகதிவிதிகள் வ்யர்த்தங்களாகும். ஆனதுபற்றியே நிக்ஷேபரக்ஷாதிகளில் ஶரணாகதிவிதாநத்தை ஸவிஸ்தரமாக ஸ்வாமி தேசிகன் ஸ்தாபநம் செய்தருளியது. இதற்குப் பூர்வாசார்ய ஸம்மதியையும் ஸாத்யோபாயஶோதநாதிகாரத்திலே வெளியிட்டருளினார். 'அங்கபஞ்சக ஸம்பந்நமான ஆத்ம ரக்ஷாபரந்யாஸமே ப்ரபத்திஶாஸ்த்ரமெல்லாவற்றிலும் ப்ரதானமான விதேயம்' என்று ஸ்ரீவிஷ்ணுசித்த வாதிஹம்ஸாம்புவாஹ வரதாசார்யாதிகள் ஸங்க்ரஹித்தார்கள்' என்று ஸ்ரீபாஷ்யகாரருடைய ப்ரசிஷ்யரான எங்களாழ்வானும், தமது ஆசார்யனாகிய கிடாம்பி அப்புள்ளாரும், பரமாசார்யனாகிய நடாதூர் அம்மாளும் இவர் முதலிய மற்ற ஆசார்யர்களும் ஶரணாகதியை விதேயமாகக் காட்டியிருக்கிறார்கள் என்பதாக இங்கு பூர்வாசார்ய கண்டோக்தியாகிற ஸம்ப்ரதாயத்தையும் உதாஹரணம் செய்தருளினார்.

ஶரணாகதியானது விதேயமானதுதான் என்று நிலைபெறுமாகில், ஶாஸ்த்ரமுகத்தால் சேஷத்வஜ்ஞாநாதிகள் பிறந்தவர்களும் ஶரணாகதியை மோக்ஷார்த்தமாக அநுஷ்டாநம் செய்யவேணுமென்று தேறுகிறது. இதை அநுஸரித்தே இக்காலத்திலும் முமுக்ஷுக்களான ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஶரணாகதியை அநுஷ்டித்து வருகிறார்கள். பக்தியோகத்தின் ப்ரயோகமும் உபதேசமும் லுப்தமாகிய இக்காலத்தில் ஶரணாகதி ப்ரயோகமும் உபதேசாநுஷ்டாநங்களும் தொடர்ந்துவருவது முமுக்ஷுக்களின் பாக்ய விசேஷமே. ஶரணாகதியானது விதேயம் என்கிற பக்ஷத்தைச் ஶாரீரக ஶாஸ்த்ரத்தில் ஸூத்ரகாரரும் ஸ்ரீபாஷ்யகாரரும் ச்ருத ப்ரகாசிகாசார்யரும் அநுக்ரஹிக்கிறார்கள் என்பதைத் தெளிவிப்பதே இந்த வ்யாஸத்தின் முக்யமான நோக்கம். (சாரீர 3-அ 3-பா 24.) ஶப்தாதிபேதாதிகரணத்திலே இப்பக்ஷமானது ஸுப்ரதிஷ்டிதமாகின்றது.

'நாநா ஶப்³தா³தி³பே⁴தா³த்' என்பதாக இவ்வதிகரண ஸூத்ரம். இதிலே வேதாந்தத்தில் விஹிதைகளான வித்யைகளுக்குப் பரஸ்பரம் பேதத்தை ஸாதிக்கின்றது. ஶப்தபேதம் முதலிய ஆறுகாரணங்கள் இப்படி வித்யாபேதம் கொள்வதற்குப் ப்ரமாணமென்று ஸூத்ரத்தின் திரண்ட பொருள். வேதாந்தங்களில் ஸத்வித்யை, தஹரவித்யை, பூமவித்யை, உபகோஸலவித்யை, ஶாண்டில்ய வித்யை என்றாற்போல் பற்பல வித்யைகள் விஹிதைகளன்றோ? இவைகளுக்கு இங்கு பரஸ்பரம் பேதத்தையே ஸமர்த்தநம் செய்வதாகக் கொண்டால் ஶப்தபேதத்தை இதற்குப் ப்ரமாணமாக ஸூத்ரத்தில் சொல்லியது பொருந்தாது. ஏனெனில்:- ஶப்தபேதமென்பது வெவ்வேறு அர்த்தங்களை தெரிவிக்குமவைகளான ஶப்தங்கள் வேறுபட்டிருக்கை. 'யஜேத' 'த³த்³யாத்' 'ஜுஹுயாத்' என்று மூன்று ஶப்தங்களும் வெவ்வேறு அர்த்தங்களை போதிக்குமவை. அவ்வாறான ஶப்தபேதமிருப்பதைக்கொண்டு யாகம், தாநம், ஹோமம் இவை பரஸ்பரம் பிந்நங்கள் என்று ஸ்தாபநம் செய்யலாம். ப்ரக்ருதத்தில் வித்யாவிஷயத்திலோவெனில் வெவ்வேறு அர்த்தங்களைச் சொல்லும் ஶப்தங்கள் இல்லை. 'உபாஸீத' 'த்⁴யாயீத' 'வித்³யாத்' என்றாப்போலவே விதி

வாக்யங்கள் காண்கின்றன. ஸாமாந்ய விசேஷ ந்யாயத்தினாலே இவை ஒரு அர்த்தத்தையே போதிக்கின்றனவென்பது லகு ஸித்தாந்தத்திலே ஸுப்ரதிஷ்டிதமாயுள்ளது. ஆகவே ஶப்தபேதத்தைக்கொண்டு ஸத்வித்யாதிகளுக்குப் பரஸ்பரபேதஸமர்த்தநம் செய்வதில் ஸூத்ரத்திற்கு நோக்கன்று. வேறு தாத்பர்யம் என்னவெனில்—ஶரணாகதி என்பதாக வேதாந்தவிஹிதையான வித்யைக்கு ஸத்வித்யை முதலிய மற்ற வித்யைகளோடு பேதத்தை ஸாதிப்பதே இந்த அதிகரணத்தின் நோக்கம். இவ்வாறாகக் கொண்டால் ஶப்தபேதமானது பொருந்துகிறது. பரபக்தி போதகங்களான ஶப்தங்களும் ஶரணாகதி போதகங்களான ஶப்தங்களும் வெவ்வேறு அர்த்தபோதகங்களானவை. அவ்வாறான ஶப்தபேதத்தினால் ஶரணாகதிவித்யையானது ஸத்வித்யாதிகளிற்காட்டிலும் வேறுபட்டது என்று கொள்ளவேண்டும் என்பதாக ஆசார்யர்கள் நிர்வாஹம் செய்தார்கள்.

இங்கு ஸ்ரீபாஷ்யத்தில் 'அக்ஷரவித்யாதிகா:' என்று ஆதிஶப்தம் உள்ளது. இதை விவரணம் செய்தருளுமிடத்தில்,

'ஆதிஶப்தேந ந்யாஸோ விவக்ஷித: ஸூத்ரேऽபி ஶப்தாதிபேதஸ்ராவாச்ச'

என்றார் ச்ருதப்ரகாசிகாசார்யர். ஸ்ரீபாஷ்யத்திலுள்ள ஆதிஶப்தத்திற்குச் ஶரணாகதியில் நோக்கு; எனெனில்—ஸூத்ரத்தில் 'ஶப்தாதிபேதாச்ச' என்று ஶப்தபேதத்தைக் கொண்டு வித்யைகளுக்குப் பரஸ்பரம் பேதஸமர்த்தநம் காண்கிறது. பரபக்தி ரூபங்களான வித்யைகளுக்குப் பூர்வோக்தரீதியில் ஶப்தபேதம் கிடையாது. ஶரணாகதிக்கே இங்கு மற்றுள்ள வித்யைகளோடு பேதஸமர்த்தநம் கொள்ளவேண்டும். ஆகவே 'ஆதி' ஶப்தத்தினால் ஶரணாகதியானது ஸ்ரீபாஷ்யகாரருக்கு விவக்ஷிதை என்று ச்ருதப்ரகாசிகையின் கருத்து.

நயமயூகமாலிகை என்பதாக அப்பய்யதீக்ஷிதர் ஸ்ரீபாஷ்யகாரஹ்ருதயாநுஸாரியாகச் செய்திருக்கும் க்ரந்தமானது ப்ரஸித்தமானது. அதிலும் இவ்வதிகரணத்தில் 'ஹ்ருதரோ...

...ணாம் உபாஸநாதிவித்யாநாம் ந்யாஸவித்யாயாஶ்ச ஶப்தாந்தராதிஹேதோர்பேதஸித்தி: உபபாதிதம்... ஸ்வயம் ச தேவதேவேஶா ஸூசித:' என்றும் மேலே ஸங்க்ரஹகாரிகையிலும் 'ந்யாஸோபாஸநயோஸ்தாவச் ஶப்தை: ஸ்பஷ்டம் விபஜ்யதே' என்றும் ஸித்தாந்தம் செய்திருப்பதானது இங்கு அநுஸந்தேயம். ஶப்தபேதம் முதலியவை விதேயார்த்தபேதத்திற்கே காரணங்கள் என்பது பூர்வமீமாம்ஸையில் நிர்ணீதமானது. இங்கும் 'ஶப்தாதய: ப்ரயாநவிஷயபேதஹேதவ:' என்று ச்ருதப்ரகாசிகையிலும் 'ஶப்தாந்தராதிபி: க்ருத விஷயபேதபேதவ: கர்மபேதா: ப்ரஸ்ஜ்யந்தே' என்று ஸ்ரீபாஷ்யத்திலும் கண்டோக்தியுள்ளது. ஆகவே ஶரணாகதியை விதேயமென்று கொண்டே இங்கு பேதத்தை ஸமர்த்தநம் செய்திருப்பது மிகவும் முக்கியமாக யாவரும் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம்.

அடுத்தது விகல்பாதிகரணம். இவ்வதிகரணத்திலே ஶரணாகதி வித்யையும் விவக்ஷிதை என்றார் ச்ருதப்ரகாசிகாசார்யர். 'அஸ்மிந்நதிகரணே ந்யாஸவித்யாऽபி விவக்ஷிதா' என்று வ்யாக்யாநாரம்பம். வேதாந்த விஹிதைகளான வித்யைகளில் ஏதேனுமொன்றை மோக்ஷார்த்தமாக அநுஷ்டாநம் செய்தால் போதுமானது. ஶரணாகதியை அநுஷ்டிப்பவன் மற்ற வித்யைகளில் ஒன்றையும் அநுஷ்டாநம் செய்யவேண்டியதில்லை. அவ்வாறே மற்ற வித்யாநிஷ்டர்களும் ஏதேனுமொன்றையே அநுஷ்டிக்கவேண்டும். அந்தமில் பேரின்பமாகிய மோக்ஷாநந்தாநுபவமே ஒவ்வொரு வித்யைக்கும் பலம். அவ்வநுபவத்தில் தாரதம்யமென்பது கிடையாது. ஆதலால் ஏதேனுமொரு வித்யையினாலேயே அவ்வநுபவம் வாய்க்கும்போது மற்ற வித்யையை அநுஷ்டாநம் செய்யவேண்டியதில்லையே என்று ஸித்தாந்தஸாரம். முன் அதிகரணத்தில் ஶரணாகதியநுஷ்டாநத்தையும், இவ்வதிகரணத்தில் அவ்வுபாயத்திற்கு மோக்ஷம் பலம் என்பதையும், பக்தியோகத்திற்கு அங்கமான

நிலையிலேயே ஶரணாகதி நிற்கவில்லை, பக்தியைப்போல் ஸ்வதந்த்ரமான மோக்ஷோபாயமுமாய் நிற்கிறது என்பதையும் ச்ருதப்ரகாசிகாசார்யர் தெளிவித்தாராயிற்று. இவ்வாசார்யன் தாமே லகுஸித்தாந்தத்திலே ஶரணாகதியானது லகுவான உபாயமேயாகிலும் குருதரமான உபாஸநத்தோடு துல்யமாய் விகல்பிதமாகலாம். ஶாஸ்த்ரமானது பக்தி அல்லது ஶரணாகதி மோக்ஷோபாயம் என்று விதிப்பதால் யுக்தியைக்கொண்டு இதை ஆக்ஷேபம் செய்தல் கூடாது என்று ஸ்தாபநம் செய்தருளினர்.

[illegible] என்பதே அது. அதே லகு ஸித்தாந்தத்திலே மேலேயும்—[illegible] என்பதாக ஶரணாகதியானது பக்தியைப்போலவே ப்ராப்திவிரோதியான பாபங்களுக்குப் பரிஹாரமாய் பக்தியோடு விகல்பம் பெறுகிறதென்றார்.

ஶரணாகதியானது அநாதியான பகவந்நிக்ரஹத்தை நிவர்த்தநம் செய்து அவனுடைய அநுக்ரஹஸங்கல்பத்திற்குக் காரணமாகிறது என்பதை தைத்திரீய ச்ருதி விவரணமுகத்தாலே ஆநந்தமயாதிகரண ச்ருதப்ரகாசிகையிலும் காணலாம்—

[illegible] என்பதாக அங்கு ஸ்ரீஸூக்தி. ஸ்ரீபாஷ்யமங்களச்லோக விவரணத்தில்—

[illegible] என்பதாக ஶரணாகதியும் சாரீரகத்தின் ஸாதநாத்யாயத்தில் விவக்ஷிதையானமையைக் காட்டினர். ஶாரீரகஶாஸ்த்ரத்தில் முதல் இரண்டு அத்யாயத்தினால் ஸித்தோபாயமும் ப்ராப்யமுமாகிய பரப்ரஹ்மஸ்வரூபத்தையும் மேலே இரண்டு அத்யாயங்களினால் ஸாத்யோபாயங்களாகிய பக்திப்ரபத்திகளையும் பரமபலமான முக்தியையும் நிரூபணம் செய்கிறது. அதை ஸ்ரீபாஷ்யாரம்பச்லோகத்தில் முதல் இரண்டு பாதங்களில் ஸங்க்ரஹிக்கிறதாக ச்ருதப்ரகாசிகை. இதனால் பக்தியும் ஶரணாகதியும் ஸாத்யோபாயங்கள் என்று தெளிவாக்கியபடி.

நான்காவது அத்யாயத்தின் முதல் பாதத்திலே தததிகமாதிகரணத்தில் ப்ரஹ்மவித்யாப்ராப்திதசையில் பூர்வபாபவிநாசமும் உத்தரபாபங்களுடைய அச்லேஷமும் ஸ்தாபிதமாயுள்ளது. இதில் ‘வித்யாப்ராப்தி’ ஶப்தமானது ஸ்ரீபாஷ்யத்திலே பொதுவாக உபாஸந ப்ராப்தியைப்போல் ஶரணாகதி நிஷ்பத்தியையும் போதிக்கின்றதாக ச்ருதப்ரகாசிகை. [illegible] என்று.

இவ்வாறாக ஶாரீரகபாஷ்ய ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்திகளால் ஶரணாகதியானது விதேயமாகையால் புருஷப்ரயத்நஸாத்யமானதொரு வ்யாபாரவிசேஷமென்றும், பக்தியோடு துல்யபலமாய் விகல்பிதமென்றும், ஸாத்யோபாயமாய் நின்று ஸித்தோபாயபூதனை ஸ்ரீய:பதியின் அநாதிகாலுஷ்ய சமநம் செய்து அம்முகத்தாலே ப்ரஸாதஹேதுவென்றும் இதையநுஷ்டிப்பவனுக்கு ப்ராசீநபுண்யபாபங்கள் நசித்து உத்தரகாலத்தில் ப்ராமாதிகமானவை ஸம்பந்தம்பெறாமல் அச்லேஷவிஷயமாகும் என்றும் தனித்தனியே கண்டோக்தங்களாகின்றன.

ஶரணாகதிகத்யவ்யாக்யாந ச்ருதப்ரகாசிகையில் ஶரணாகதியின் அநுஷ்டாநக்ரமத்தைப் பற்றி பூர்வாசார்யஸம்ப்ரதாயத்தை ஸங்க்ரஹித்துக் காட்டியருளியது மிகவும் முக்யமான விஷயம். அங்கு அருளியது என்னவென்றால்—

‘ஶ்ரியம் ப்ரபத்யே [illegible]

ஹம் சரண்வா தத ராஜ்யா அடக்ந நஸாஸ்ப தே இதி வக்ஷ்யமாண ந்யாஸாந நந ஸாநு ப்ரயோகம் ஸ்ரியம் ப்ரபத்யே-ஹமவஶ’ இதி’

‘பிராட்டியிடம் புருஷகாரப்ரபத்தி செய்த பிறகு, பிராட்டி ஸந்நிதியிலே மூலமந்த்ரத்தினால் தன் ஸ்வரூபாநுரூபமான மோக்ஷாதி புருஷார்த்த ப்ரார்த்தனைசெய்து அந்த புருஷார்த்தத்திற்கு அவள் உபாயமாகவேண்டுமென்று அவளிடம் ப்ரார்த்தித்துப் பிறகு பிராட்டியின் அநுமதிபெற்றுத் த்வயமந்த்ரத்தை அநுஸந்தாநம் செய்வது என்பதாக பூர்வாசார்யர்களுடைய அநுஸந்தாநம்; அதை நினைத்து எம்பெருமானார் ‘பகவந்நாராயண’ என்று, முதலில் ஸ்ரீப்ரபத்தி அநுஷ்டிக்கிறார் என்று இதன் கருத்து. இங்கு த்வயாநுஸந்தாநமும் பகவச் சரணாரவிந்த ஶரணாகதி செய்வதும் கத்யத்தில் காண்கையால் அதுவும் விவக்ஷிதமே. ‘இருவரும் கொடுக்கும்படி ஒரு மிதுனத்திற்குச் சேஷமாயிறே உபயவிபூதியுமிருப்பது’ என்றும் ‘ஆச்ரயணவேளையோடு போகவேளையோடு வாசியற ஒரு மிதுநமே உத்தேச்யம்’ என்றும் ஈட்டிலுள்ள ஸ்ரீஸூக்திகளை உதாஹ்ருதையான ஶரணாகதிகத்யச்ருதப்ரகாசிகா ஸூக்தியோடு அநுஸந்தாநம் செய்யவும்.

நஞ்ஜீயர் அருளிய ஸ்ரீஸூக்தபாஷ்யத்திலேயும் ‘ஸ்ரியம் ஸ்ரீஸ்ரியே இதி ஸவ்யாக்யா கஷ்ட்ட புருஷகாரத்வேந உபாயத்வேந ச ஸ்ரீஸ்ரீட்ரணகவ்யு’ என்பதாகவும் ‘ப்ரக்ஷ தேஷவி ந வதீரா த்வாஷ்ட்ர வத்நீரா த்வஷ்ட்ர வ ஐப த்வஷ்ட்ரக்வ மோக்ஷப்ரதகவாதிகம் கிருஷ்ண வாஸ்வரவஸஹிதயோரேவ’ இத்யாதியாகவும் உள்ள திவ்யஸூக்திகளும் ச்ருதப்ரகாசிகையில் உதாஹ்ருதமான ஸம்ப்ரதாயத்திற்கு அநுஸாரிகளானவை என்பது ஸஹ்ருதயர் நினைக்கத்தக்கது. ‘ஸ்ரீஸூக்தபாஷ்யத்திலே பெரியஜீயரும் அபேக்ஷிதார்த்தங்களெல்லாமுபபாதித்தார்’ என்றும், ‘எம்பெருமானைச்சொன்னவிடத்திலே பிராட்டியையும் சொல்லிற்றாம்’ என்று துடங்கி உடையவர் அருளிச்செய்த வார்த்தையை ஆச்சான் பக்கலிலே கேட்டு நஞ்ஜீயர் ஸங்க்ரஹித்தார்’ என்றும் ஸித்தோபாயசோதநாதிகாரத்திலே ஸ்ரீதேசிகன் உதாஹ்ருத ஸ்ரீஸூக்த பாஷ்யத்தைக்கொண்டு ஸித்தாந்தம் செய்திருக்குமதையும் கண்டுகொள்வது. ஆச்சான் பக்கலிலே என்பது கிடாம்பியாச்சானைக் குறிக்கின்றது. இப்படி ச்ருதப்ரகாசிகையில் ஶரணாகதியைச் ஶாரீரகஶாஸ்த்ரத்தில் பலவிடங்களில் விவக்ஷித்து விவரணம் செய்து ஶரணாகதிகத்யத்தில் அநுஷ்டாநக்ரமத்திற்கு ஸம்ப்ரதாயம் காட்டியும் இதை ஸ்தாபநம் செய்தருளினார்.

ஸ்ரீபாஷ்யகாரரும் ஆநுமாநிகாதிகரணத்தில் ‘தஸ்ய உபஸீதரணம் த்வாரணாமதிரேவ’ என்று கடவல்லியில் வசீகார்யபரம்பரையை வகுத்தவிடத்தில் அருளிச்செய்தார். அநாதி ஆஜ்ஞாதிலங்கனங்களாலே வந்த பகவந்நிக்ரஹ விசேஷமாகிற ப்ரதாநவிரோதிக்குச் செய்யும் பரிஹாரமானது ஶரணாகதியே என்று தாத்பர்யம். வேதார்த்தஸங்க்ரஹத்திலும்—‘வநதேஷாம் வஸாவஸாரமோவந ஹமவத்வவதிதோ ரேண ரோவவஷ்யதே’ என்பதாக ஶரணாகதியைத் தவிர்த்து வேறு உபாயம் இல்லை என்று இதரவ்யவச்சேதம் தோற்ற அருளினார். பக்தியோகமாகிய மற்றொரு உபாயம் ஶாஸ்த்ர ஸம்மதமாயிருக்க ஶரணாகதியைத் தவிர்த்து வேறு உபாயமில்லை என்னலாகுமோ என்று ஒரு ஆசங்கை எழுகிறது. ச்ருதப்ரகாசிகாசார்யர் தாமருளிய தாத்பர்யதீபிகை என்கிற வ்யாக்யாநத்திலே அதற்கு அருளிய ஸமாதாநமென்னவென்றால்—‘பக்தியோகநிஷ்டருக்கு பக்தியோகம் நிறைவேறுவதற்காக அதற்கு அங்கமாக ஶரணாகதி யபேக்ஷிதையாகிறது. ஶரணாகதி நிஷ்டருக்கோ ஸ்வதந்த்ரமாய் உபாயமாகிறது. ஆகவே அங்கமாகவும் ஸ்வதந்த்ரமாகவும் இரண்டு ப்ரகாரமாய் ஶரணாகதியே உபாயமாவதால் இவ்வாறு வேதார்த்தஸங்க்ரஹத்தில் அருளியது’ என்பதே.

‘ப்ரபத்திஸேரேண ரோவவஷ்யதே’ இதி

பக்தியோகநிஷ்டஸ்யாபி தந்நிஷ்டத்வஸ்ய தஜ்ஜ்ஞேந ப்ரபத்த்யபேக்ஷிதத்வாச்ச ப்ரபத்திநிஷ்டஸ்ய ஸ்வதந்த்ரோபாயத்வாச்ச, ப்ரபத்திஶாஸ்த்ரேண நோபபத்யத இத்யர்த:' என்று.

'ஶோசேவ யே ப்ரபத்யந்தே ஶோகோத்தாம் தரந்தி தே' இதி தத்வேஸ்யத்வஸ்யாதந:' கர்மஜ்ஞானவிதித்ரு ஶரணோயப்ரக்ருதிஸம்ஸர் ஸ்ருதிவாச ஸம்ஸாராந்மோக்ஷ: ஸம் ப்ரபத்திஶாஸ்த்ரேண நோபபத்யத இத்யர்தம் ஸம் பவதி। 'நாந்ய: பந்தா அயநாய வித்யதே' இத்யாதி ஶ்ருதிஷு' என்பதாக அடுத்த ஸ்ரீஸூக்தி வேதார்த்தஸங்க்ரஹத்திலேயுள்ளது. பகவச்சரணாகதியைத் தவிர்த்து ஸம்ஸாரநிவர்த்தநோபாயம் ஒன்றுமில்லை என்பதாக உதாஹ்ருதங்களான கீதை உபநிஷத்து இவைகளில் சொல்லப்பட்டது என்பதாக இதன் கருத்து. இதில் 'வித்வான்' என்கிற ஶப்தமானது உபாஸநம் ஶரணாகதி இரண்டிற்கும் பொதுவான ஶப்தம். ஆகவே ஶரணாகதியும் மோக்ஷஸாதநமென்று ச்ருதியின் பொருள் என்பதாக, ச்ருதப்ரகாசிகாசார்யர் தமது வேதார்த்தஸங்க்ரஹவ்யாக்யாநத்தில் நிரூபித்தருளினர்.

'வித்வாந்' இதி வேதநவாசிஶப்த: உபாஸநப்ரபதநஸாதாரண: இதி பாவ:' என்று. இப்படி ச்ருதி, ஸ்ம்ருதி, ஸூத்ரம், ஸ்ரீபாஷ்யம், வேதார்த்தஸங்க்ரஹம், இவ்விரண்டிற்கும் ச்ருதப்ரகாசிகாசார்யரருளிய வ்யாக்யாநங்கள் இவை முதலிய ப்ரமாணஸம்ப்ரதாய நிபந்தநங்களிலும், விசேஷித்து ஶரணாகதிகத்ய தத்வ்யாக்யாநங்களிலும் ஶரணாகதியின் உபாயத்வமானது கையிற் கனிபோல் விளங்குகிறது.

ஶாரீரகாதிகரணநிர்ணயங்கள் ஶரணாகதி விஷயத்திலே இதற்கு மேலும் உபயோகவிசேஷம் பெறுகின்றன வென்பதையும், ஶரணாகதனுடைய திநசரி அநுஷ்டாநக்ரமங்களுக்கு அவை ஆதாரமாகையையும்பற்றிப் பிறகு விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

# பஞ்சாங்க ஸங்க்ரஹம்

## கர-ஹூ புரட்டாசி-மீ 1951-ஹூ ஸெப்டம்பர்-அக்டோபர்--மீ

[தக்ஷிணாயனம்- வர்ஷருது-கந்யா மீ]

| | | | | |
|---|---|---|---|---|
| 17—9—51 | 1உ | திங்கட்கிழமை | ... | ஶூன்யதிதி; கந்யாரவி 9-8. |
| 18—9—51 | 2உ | செவ்வாய்க்கிழமை | ... | கந்யாக்ருஷ்ண த்ருதீயைதிதி. |
| 19—9—51 | 3உ | புதன்கிழமை | ... | மஹாபரணி. |
| 23—9—51 | 7உ | ஞாயிற்றுக்கிழமை | ... | மத்யாஷ்டமி. |
| 27—9—51 | 11உ | வியாழக்கிழமை | ... | வைஷ்ணவ ஏகாதசி. |
| 30--9--51 | 14உ | ஞாயிற்றுக்கிழமை | ... | ஸர்வ அமாவாஸ்யை. |
| 1-10--51 | 15உ | திங்கட்கிழமை | ... | நவராத்ரி ஆரம்பம். |
| 6-10--51 | 20உ | சனிக்கிழமை | ... | திருக்கேட்டை ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம். |
| 9-10—51 | 23உ | செவ்வாய்க்கிழமை | ... | நவமி தசமி திதித்வயம்; மஹா நவமி ஸரஸ்வதி பூஜை. |
| 10-10—51 | 24உ | புதன்கிழமை | ... | ச்ரவணம் ஸ்ரீ வேதாந்தாந்ததேசிகன் திருநக்ஷத்ரம்; விஜயதசமி |
| 11-10—51 | 25உ | வியாழக்கிழமை | ... | ஸர்வ ஏகாதசி, ஶூன்யதிதி. |
| 15-10—51 | 29உ | திங்கட்கிழமை | .. | கந்யாக்ருஷ்ண ப்ரதமைதிதி. |
| 16-10—51 | 30உ | செவ்வாய்க்கிழமை | ... | கந்யாக்ருஷ்ண த்விதீயைதிதி. |
| 17-10—51 | 31உ | புதன்கிழமை | ... | ஶூன்யதிதி; துலாரவி 36-30. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்.) |

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

# ஆஸ்திக்யம்

(10-வது ஸம்புடம் 5-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாநவித்வான், தேசிகதர்சநவிஜயத்வஜ, புத்தங்கோட்டகம்,
ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி.]

தேவதூதன் முத்கலனைக்குறித்துச் சொல்லுகிறான்:—

‘𑌜𑌰𑌾𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌕𑍍𑌷𑍁𑌤𑍍𑌤𑍃𑌷𑍍𑌣𑍇𑌷𑌾𑌂
𑌹𑌰𑍍𑌷𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌃 𑌸𑍁𑌖𑌂 𑌨 𑌚 ।
𑌨 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌨 𑌸𑍁𑌖𑌂 𑌚𑌾𑌪𑌿
𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑍌 𑌕𑍁𑌤𑍋 𑌮𑍁𑌨𑍇 ॥
𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌮𑍌𑌦𑍍𑌗𑌲𑍍𑌯
𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 𑌸𑌾 𑌗𑌤𑌿𑌃 𑌪𑌰𑌾 ।
𑌦𑍁𑌷𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑌾 𑌪𑌰𑌮𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃
𑌅𑌗𑌮𑍍𑌯𑌾 𑌕𑌾𑌮𑌗𑍋𑌚𑌰𑍈𑌃 ॥’

[அந்த தேவதைகளுக்கு மஹாப்ரளயத்திலும் கூட நாசமில்லை என்று கீழ்வாக்யத்தில் சொல்லியிருப்பதால் அவர்களுக்கு கிழத்தனம் மரணம் எப்படி உண்டாகும்? அவர்களுக்கு ஶப்தாதி விஷயங்களைக் காண்பதினுலுண்டாகும் ஹர்ஷமும், அந்த விஷயத்தை ஸ்வாதீனமாக்கிக்கொள்வதினுலுண்டாகும் ப்ரீதியும், அதை அநுபவிப்பதனுலுண்டாகும் ஸுகமும் உண்டாகிறதில்லை. இப்படி விஷயாநுபவத்தில் ஸுகதுக்கங்களுக்குச் காரணமான ஆசை த்வேஷங்களுமில்லை. ஓ மௌத்கல்யனே! அந்த உலகமானது காம்யதர்மங்களை அநுஷ்டிக்கிற மனிதர்களால் அடைய முடியாதது. தேவதைகளினுலும் அடையமுடியாத உயர்ந்த ஸ்தானமென்று ஆசைப்படக் கூடியதாக இருக்கிறது.]

இந்த ‘𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌾𑌸𑍍𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑌾𑌃 𑌶𑍁𑌭𑌾𑌃’ என்று ஆரம்பித்து இதுவரையில் தேவதூதனுல் வர்ணிக்கப்பட்ட லோகம் ப்ரஹ்மலோகத்திற்கு உயர இருப்பதாகவும், தேஜோமயமென்றும், ஸ்வயம்ப்ரபமென்றும், அங்கிருக்கிறவர்களை தேவதைகள் பூஜிப்பதாகவும், அங்கிருக்கிறவர்களுக்கு காமம் கோபமில்லை என்றும், அவர்கள் திவ்யஶரீரர்களென்றும், ப்ரளயகாலத்திலும் அவர்கள் ஶரீரம் நசிப்பதில்லையென்றும், அவ்வுலகத்திற்கு மேல்பட்ட பலமில்லையென்றும், தேவதைகளும்கூட அவ்வுலகத்திற்குப்போய் வஸிக்க ஆசைப்படுவதாகவும் சொல்லுகிறபடியால் அந்த உலகம் மோக்ஷஸ்தாநமான ஸ்ரீவைகுண்டலோகமென்று நிச்சயிக்கப்படுகிறது. இப்படி ஸர்வோத்க்ருஷ்டலோகமான ஸ்ரீவைகுண்டத்தை வர்ணித்துவிட்டு முத்கலன் அடையக் கூடியதான ஸ்வர்க்கலோகத்தைப்பற்றிச் சொல்லுகிறான் மேல்—

‘𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑌿𑌮𑍇 𑌦𑍇𑌵𑌾
𑌯𑍇𑌷𑌾𑌂 𑌲𑍋𑌕𑌾 𑌮𑌨𑍀𑌷𑌿𑌭𑌿𑌃 ।
𑌗𑌮𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌨𑌿𑌯𑌮𑍈𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍈𑌃
𑌦𑌾𑌨𑍈𑌰𑍍𑌵𑌾 𑌵𑌿𑌧𑌿𑌵𑌦𑍍𑌦𑌤𑍍𑌤𑍈𑌃 ॥’

[இது நிற்க, 33-விதமான தேவர்கள் எந்த ஸ்வர்க்கங்களில் வஸிக்கிறார்களோ அந்த லோகங்கள்தான் புத்திமான்களான மனிதர்களினுல் பற்பல தபஸ்ஸுகளினுலும் ஶாஸ்த்ரப்படி செய்யப்படுகிற தாநங்களினுலும், ஸுகாநுபவங்களுக்காக அடையப்படுகிறது.]

‘𑌸𑍇𑌯𑌂 𑌦𑌾𑌨𑌕𑍃𑌤𑌾 𑌵𑍍𑌯𑍁𑌷𑍍𑌟𑌿𑌃
𑌅𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾 𑌸𑍁𑌖𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾 ।
𑌤𑌾𑌂 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌵 𑌸𑍁𑌕𑍃𑌤𑍈𑌰𑍍𑌲𑌬𑍍𑌧𑌾𑌂
𑌤𑌪𑌸𑌾 𑌦𑍍𑌯𑍋𑌤𑌿𑌤𑌪𑍍𑌰𑌭𑌃 ॥’

[அந்த ஸ்வர்க்கஸுகமானது நீ செய்த தாநதர்மத்தினுல் உனக்கு ஸுலபமாக வந்திருக்கிறது. நீ செய்த தர்மத்தினுல் கிடைத்த அந்த ஸுகத்தைத் தபோமஹிமையினுல் நீ ப்ரகாசித்துக்கொண்டு அநுபவி.]

'உக்தஸ்தே ஸ்வர்க்கஸுகம் விப்ர!
லோகா நாநாவிதாஸ்ததா ।
குணா: ஸ்வர்க்கஸ்ய ஸம்ப்ரோக்தா:
தோஷாநபி நிபோத மே ॥'

[ஓ ப்ராஹ்மணனே! ஸ்வர்க்கலோகத்திலுண்டான ஸுகங்களையும் மற்றும் பல லோகங்களையும் அவற்றின் குணங்களையும் உனக்குச் சொன்னேன். இனி ஸ்வர்க்கலோகத்திலுடைய தோஷங்களையும் சொல்லுகிறேன் கேளும்.]

'க்ருதஸ்ய கர்மணஸ்தத்ர
புஜ்யதே யத் பலம் திவி ।
ந சாந்யத் க்ரியதே கர்ம
மூலச்சேதேந புஜ்யதே ॥
ஸோ(அ)த்ர தோஷோ மம மத:
தஸ்யாந்தே பதநம் ச யத் ।
ஸுகவ்யாப்தமநஸாம்
பதநம் யச்ச முத்கல! ॥
அஸந்தோஷ: பரீதாபோ
த்ருஷ்ட்வா தீப்ததரா: ஶ்ரிய: ।
யத்பவத்யவரே ஸ்தாநே
ஸ்திதாநாம் தச்ச துஷ்கரம் ॥
ஸம்ஜ்ஞாமோஹஶ்ச பததாம்
ரஜஸா ச ப்ரதர்ஷணம் ।
ப்ரம்லாநேஷு ச மால்யேஷு
தத: பிபதிஷோர்பயம் ॥
ஆப்ரஹ்மபவநாதேதே
தோஷா முத்கல! தாருணா: ॥'

[இந்த பூலோகத்தில் பண்ணப்பட்ட புண்ய கர்மங்களுக்கு எந்த ஸுகம் பலமோ அந்த பலமானது மிச்சமில்லாமல் ஸ்வர்க்கலோகத்தில் அநுபவிக்கப்படுகிறது. ஸ்வர்க்கத்தில் வேறு புண்யகர்மங்களைச் செய்யக்கூடாது. ஸ்வர்க்க ஸுகத்தில் இது முக்கியமான தோஷமென்று என்னுடைய அபிப்ராயம். புண்யகர்ம பலமான ஸுகாநுபவத்தின் கடைசியில் அவனை பூலோகத்தில் கர்ப்பவாஸத்திற்காக தள்ளிவிடுவதும் தோஷமென்றே என் அபிப்ராயம். ஸ்வர்க்கஸுகத்தைப் பூர்ணமாகவநுபவித்து த்ருப்தியுண்டாகாத மனத்தோடு இருக்குமவர்களை அந்த ஸுகாநுபவமில்லாமல் செய்வதும் தோஷமென்றே என் அபிப்ராயம். அதிகமான புண்யங்களைப்பண்ணின மனிதர்கள் ஸ்வர்க்கத்தில் அதிகங்களான ஸுகங்களை அநுபவிப்பதைப்பார்த்து அல்பங்களான புண்யங்களைப்பண்ணி ஸ்வர்க்கத்தில் அல்ப ஸுகங்களை அநுபவிக்கிறவர்கள் வருத்தப்படுவதும் ஸ்வர்க்கத்திலிருக்கும் தோஷமென்றே என் அபிப்ராயம். ஸ்வர்க்கஸுகத்தோடிருக்கும்பொழுதே கழுத்திலிருக்கிற புஷ்பமாலைகள் கொஞ்சம் வாடி இருப்பதைப்பார்த்து 'ஐயோ இந்த ஸ்வர்க்கஸுகங்கள் இன்றோடு நசித்துவிடுமே! கர்ப்பவாஸாதி கஷ்டங்கள் வந்துவிடுமே! என்று பயந்து அவர்கள் புலம்பி வருத்தப்படுவதும் ஸ்வர்க்கத்தின் தோஷமாகும். பயங்கரங்களான இந்த தோஷங்கள் எல்லாம் ஸ்வர்க்கலோகத்தில் மாத்திரம் இருக்கின்றன என்று எண்ணவேண்டாம். ப்ரஹ்மதேவனுடைய லோகமான ஸத்யலோகத்திலும் கூட இந்த தோஷங்களிருக்கின்றனவென்று தேவதூதன் முத்கலனைநோக்கிச் சொன்னான்.]

'நாகலோகே ஸுக்ருதிநாம்
குணாஸ்த்வயுதஶோ ந்ருணாம் ।
அயம் த்வந்யோ குண: ஶ்ரேஷ்ட:
ச்யுதாநாம் ஸ்வர்க்கதோ முநே! ॥
ஶுபாநுஶயயோகேந
மநுஷ்யேஷூபஜாயதே ।
தத்ராபி ஸ மஹாபாக:
ஸுகபாகபிஜாயதே ॥
ந சேத் ஸம்புத்யதே விப்ர!
கச்சத்யதமதாம் தத: ।
இஹ யத் க்ரியதே கர்ம
தத் பரத்ரோபபுஜ்யதே ॥
கர்மபூமிரியம் ப்ரஹ்மந்!
பலபூமிரஸௌ மதா ॥'

[தேவதூதன் இந்த லோகத்தில் புண்யகர்மங்களைச் செய்து அதனால் ஸ்வர்க்கலோகத்தில் ஸுகங்களை அநுபவிக்கிறவர்களுக்கு பதினா

யிரம் குணங்களுண்டு. ஸ்வர்க்கலோக ஸுகங்களை இழந்து திரும்பி பூலோகத்திற்கு வந்தவர்களுக்கு உயர்ந்ததான மற்றொரு குணமுண்டு. ஏற்கனவே செய்த புண்யகர்ம சேஷத்தினால் மநுஷ்ய ஜாதியில் பிறந்து ஸுகங்களை அநுபவிக்கிறான். மனிதனாக இருக்கிற காலத்தில் மோக்ஷஸாதகங்களான ஜ்ஞாநங்களை ஸம்பாதித்து பகவத்பக்தியை அநுஷ்டிக்காத பக்ஷத்தில் பிறகு திர்யக்காகவும் ஸ்தாவரங்களாகவும் பிறக்கக்கடவன். இந்த உலகத்தில் பண்ணுகிற கர்மங்களின் பயன்கள் பரலோகத்தில் அநுபவிக்கப்படுகின்றன. ஆகையினால் இந்த பூலோகமானது கர்மபூமி என்றும் ஸ்வர்க்காதி பரலோகங்கள் பலபூமிகள் என்றும் சொல்லப்படுகின்றன என்று சொன்னான்.]

தேவதூதனால் சொல்லப்பட்ட இந்த வார்த்தைகளைக் கேட்டு முத்கலன்—

'மஹாந்தஸ்ஸ்வர்கதோஷா: /
த்வயா ஸ்வர்கஸ்ய கீர்திதா: |
நிர்தோஷ ஏவ யஸ்த்வந்ய:
லோகஸ்தம் ப்ரப்ரவீஹி மே ||'

[உன்னால் ஸ்வர்க்கலோகத்திலிருக்கின்ற மஹாதோஷங்கள் சொல்லப்பட்டன. இப்படிப்பட்ட தோஷங்களில்லாத வேறு லோகமிருந்தால் அதைச் சொல்லவேணும்] என்று தேவதூதனைப்பார்த்துக் கேட்டான்.

அதற்கு தேவதூதன் சொல்லுகிறான்—

'ப்ரஹ்மண: ஸதநாதூர்த்வம்
தத்விஷ்ணோ: பரமம் பதம் |
ஶுத்தம் ஸநாதநம் ஜ்யோதி:
பரம் ப்ரஹ்மேதி யத்விது: ||'

[ப்ரஹ்மலோகம் வரையில் இந்த தோஷங்கள் எல்லாமிருக்கின்றனவென்று முன்பே சொன்னேன். ப்ரஹ்மலோகத்திற்கு உயர்ந்த இடத்தில் விஷ்ணுவினுடைய ஸர்வோத்க்ருஷ்டமான ஒரு லோகமிருக்கிறது. அந்த லோகம் தான் கீழே சொல்லப்பட்ட தோஷங்களில்லாதது; நித்யமானது; ஜ்யோதிர்மயமானது; அது பரப்ரஹ்மம் வஸிக்குமிடமென்று ஶாஸ்த்ரங்களினால் சொல்லப்படுகிறது.]

'ந தத்ர விப்ர! கச்சந்தி
புருஷா விஷயாத்மகா: |
தம்பலோபமஹாக்ரோத
மோஹத்ரோஹைரபித்ருதா: ||'

[ஶப்தாதி விஷயங்களில் ஆசையுடையவர்களாய் ஆகையினால் தம்பம் முதலான துர்குணங்களை உடையவர்கள் அந்த லோகத்திற்குப் போகமுடியாது.

'நிர்மமா நிரஹங்காரா:
நிர்த்வந்த்வா: ஸம்யதேந்த்ரியா: |
த்யாநயோகபராஶ்சைவ
தத்ர கச்சந்தி ஸாதவ: ||'

[அஹங்கார மமகாரங்களில்லாதவர்களாய் ஸுகம் துக்கம் லாபம் நஷ்டம் முதலிய த்வந்த்வங்களில்லாதவர்களாய் இந்த்ரியங்களை எல்லாம் ஜயித்து பகவத்பக்தியோகத்தைப்பண்ணுகிற தார்மிகர்கள்தான் அந்த லோகத்தை அடைகிறார்கள்.]

'ஏதத்தே ஸர்வமாக்யாதம்
யந்மாம் த்வம் ப்ருஷ்டவாநஸி! |
தவாநுகம்பயா ஸாதோ!
ஸாது கச்சாம மாசிரம் ||'

[ஓ முத்கலனே! நீ என்னைக் கேட்ட விஷயங்களுக்கெல்லாம் பதில் சொல்லிவிட்டேன். இனிமேல் உன்னுடைய தயவினால் நாம் காலதாமஸமில்லாமல் ஸ்வர்க்கலோகத்திற்கு ஸுகமாகப் போவோம்] என்று சொன்னான்.

'ஏதச்ச்ருத்வா து மௌத்கல்யோ
வாக்யம் விம்ருஶ்ய புத்தித: |
விம்ருஶ்ய முநிஶ்ரேஷ்டோ
தேவதூதமுவாச ஹ ||'

[மௌத்கல்யன் என்கிற முனிச்ரேஷ்டனானவன் தேவதூதன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு தன்னுடைய புத்தியினால் நன்றாக ஆலோசித்துப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னான்.]

'தேவதூத! நமஸ்தேஸ்து
கச்ச தாத யதாஸுகம் |
மஹாதோஷேண மே கார்யம்
ந ஸ்வர்கேண ஸுகேந வா ||'

[ஓ தேவதூதனே! உம்மை நமஸ்கரிக்கின்

றேன். நீர் ஸுகமாக ஸ்வர்க்கத்திற்குப் போய்ச்சேரும். மஹத்தான தோஷங்களை உடைய ஸ்வர்க்கலோகங்களும், மஹாதோஷங்களை உடைய அவ்வுலகத்து ஸுகங்களும் எனக்குவேண்டியதில்லை என்று சொன்னான்.]

அவற்றுள் சில துக்கங்களைச்சொல்லுகிறான்.

'பதநாந்தே மஹத்³து:க²ம்
பரிதாபஸ்ஸுதா³ருண: |
ஸ்வர்க³பா⁴ஜஶ்ச்யவந்தீஹ
தஸ்மாத் ஸ்வர்க³ம் ந காமயே ||'

[ஸ்வர்க்கலோகத்திலிருக்கிறவர்கள் ஸுகங்களை அநுபவிக்கும்போதும், அதிக ஸுகங்களோடு அங்கிருக்கிறவர்களைப் பார்த்து 'ஐயோ நமக்கு அவர்களநுபவிக்கிறவின்பங்களில்லையே' என்று கஷ்டப்படுகிறது பொறுக்கமுடியாத விஷயம். பிறகு ஸ்வர்க்கஸுகங்களை இழக்கிற ஸமயத்திலும் இவ்வின்பங்களை இழந்துவிடுகிறோமே என்கிற துக்கம் மிகவும் அதிகம். பிறகு அவ்வாத்மாக்கள் ஆகாசம் காற்று மேகம் நெல் அரிசி முதலானவைகளோடு ஒட்டிக்கொண்டு கிடப்பதும், புருஷன் வயிற்றிலிருந்து சுக்லத்தில் சேர்ந்து ஸ்த்ரீகள் வயிற்றில் சேருவதும் கர்ப்பவாஸம் பிணி பசி மூப்பு மரணங்களை அநுபவிப்பதும் மஹத்தரமான கஷ்டம். ஆகையினால் ஸ்வர்க்கவாஸத்தில் எனக்கு ஆசையில்லை.]

'யத்ர க³த்வா ந ஶோசந்தி
ந வ்யத²ந்தி சலந்தி வா |
தத³ஹம் ஸ்தா²நமத்யந்தம்
மார்க³யிஷ்யாமி கேவலம் ||'

[எந்த லோகத்திற்குப் போனால் போனவர்கள் பழைய ஸம்ஸார துக்கங்களையும் அல்லது அங்கு ஸம்பாவிதங்களான வேறுவிதங்களான துக்கங்களையும் அநுபவிக்கமாட்டார்களோ, அந்த இடத்தைவிட்டுப் பிறகு வேறு இடத்திற்கும் போகமாட்டார்களோ அப்படிப்பட்ட ஸ்தாநத்திற்குப் போக ஆஸ்தைப்படுகிறேன்] என்றான்.

'இத்யுக்த்வா ஸ முநிர்வாக்யம்
தே³வதூ³தம் விஸ்ருஜ்ய தம் |
ஶிலோஞ்ச²வ்ருத்திர்த⁴ர்மாத்மா
ஶமமாதிஷ்ட²து³த்தமம் ||
துல்யநிந்தா³ஸ்துதிர்பூ⁴த்வா
ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந: |
ஜ்ஞாநயோகே³ந ஶுத்³தே⁴ந
த்⁴யாநநித்யோ ப³பூ⁴வ ஹ ||
த்⁴யாநயோகா³த்³ப³லம் லப்³த்⁴வா
ப்ராப்ய பு³த்³தி⁴மநுத்தமாம் |
ஜகா³ம ஶாஶ்வதீம் ஸித்³தி⁴ம்
பராம் நிர்வாணலக்ஷணாம் ||'

[அந்த முத்கலரிஷியானவன் தேவதூதனிடம் இந்த வார்த்தைகளைச் சொல்லி அவனை அனுப்பிவிட்டுஸிலோஞ்சஜீவியாய் மோக்ஷார்த்தங்களான நிவ்ருத்தி தர்மங்களிலேயே ஆஸ்தையுடையவனாய், மற்றும் ஸர்வவிஷயங்களிலும் ஆசையில்லாத மனஸ்ஸை உடையவனாய், ஆகையினாலேயே ஸ்தோத்ரத்தினால் ஸந்தோஷப்படாததாயும், தூஷிப்பதனால் கோபமுண்டாகாத மனஸ்ஸை உடையவனாய், மோக்ஷம் தவிர மற்றும் ஒன்றிலும் ஆசையில்லாததினால் கல் மண்சட்டிகளிற்போலவே தங்கக்கட்டியிலும் ஆதரமில்லாதவனாய், ஸர்வேச்வரனுக்கு நித்யதாஸனான ஆத்மஸ்வரூபத்தில் நிஷ்டையோடு தன்னுடைய ஜீவநகாலம் வரையில் தினந்தோறும் பகவத்பக்தி யோகத்தையே அநுஷ்டித்துவந்தான். அப்படி அவன் தினந்தோறும் யோககாலத்தில் பகவத்பக்தியோகத்தை அநுஷ்டித்த படியினாலே விலக்ஷணமான பகவதநுக்ரஹமாகிற பலத்தை அடைந்து இதற்குமேல் ஒரு பேரின்பமில்லை என்னும்படியான பரஜ்ஞாநம் பரமபக்தி தசைகளை அநுபவித்து ஸர்வோத்க்ருஷ்ட நித்யாநந்தரூபமான ப்ரஹ்மாநந்தாநுபவரூபப்ரயோஜநத்தை அடைந்தான்.]

இப்படி முத்கலன் ஸாம்ஸாரிக ஸகல துக்கங்களையும் துறந்து 'ஸோ(அ)ஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்³ரஹ்மணா விபஶ்சிதா' என்றும், 'நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி' என்றும், வேதாந்தங்களில் வ்யக்தமாய்ச் சொல்லப்படுகிறதாய் பரப்ரஹ்மத்தோடு துல்யமான ஆநந்தத்தை சாச்வதமாக அடைந்து வாழ்ந்திருப்பதற்கு ப்ரதாநமான காரணம்

நமது வேதங்களிலும் அதன் வ்யாக்யானங்களான தர்மசாஸ்த்ரங்கள் இதிஹாஸபுராணங்களிலும் நம்பிக்கையாகிற ஆஸ்திக்யமாகையினால் இக் காலத்திய மனிதர்களுக்கும் வேதம் முதலான சாஸ்த்ரங்களில் அப்படி நம்பிக்கை உண்டாகுமானால் நாமும் அப்படிப்பட்ட பேரின்பத்தை அநுபவித்து வாழ்ந்திருக்கலாம் என்பதை புத்திமான்கள் தெரிந்துகொள்வார்கள்.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।

# வாலிவத தத்வம்

[ஸ்ரீ. உப. வித்வான் முடும்பை சக்ரவர்த்தி, வேங்கடாசார்ய ஸ்வாமி, தில்லையம்பூர்.]

ஸ்ரீராமர் வாலியைக்கொன்றது ‘ஸ்ரீராமோ விக்ரஹவாந் தர்ம: ஸர்வம் ஸஹதி ராகவ:’ என்கிற வாக்கியங்களின்படி தர்மமூர்த்தியாயும், கருணாமூர்த்தியாயுமுள்ள இவருக்குத் தகாதென்று பலர் உரக்கப் பேசுவார்கள். அதுவிஷயத்தில் பெரியோர்களுடைய ப்ரமாண வசநங்களைக்கொண்டு நிர்ணயம் எழுதப்படுகிறது.

வாலியைக்கொன்றது தோஷந்தானென்று சொல்லுபவர்கள் சில யுக்த்யாபாஸங்களை நல்லதாக நினைத்து கோஷிக்கிறார்கள். அது எப்படியெனில்:—

‘வாலீ நிராகா: ஸ்ரீராமே
நாஸ்ய தீர்ணபராங்முக: ।
யச்சது: ஸாகரேஷ்வேஷ:
ஸந்த்யோபாஸ்தி ஸஹாயவாந் ॥’ இதி

இதன்பொருள்:— 1. ராமன் விஷயத்தில் வாலி குற்றமற்றவன். 2. யுத்தத்தில் எதிரில் நின்று முன்வைத்த காலைப் பின்வாங்காத வீரனால் அடிக்கப்பட்டவனுமல்ல. 3. அவன் ப்ரதிதினமும் நான்கு ஸமுத்ரத்திலும் ஸ்நாநம் செய்து உபாஸிப்பவன். 4. ஸீதையைத் திருப்பிக்கொண்டுவரும் விஷயத்தில் வாலி ஸகாயமாகவும் ஆவான். இக்காரணங்களால் ராமர் அவனைக்கொன்றது தவறு. ‘விஷயே வா புரே வா தே யதா நாபகரோம்யஹம்’ என்று வாலி ஸ்ரீராமன்முன்பாக ‘நான் நிரபராதி’ என்று சொன்னான். தாரையினிடம் ‘தர்மஜ்ஞஸ்ச க்ருதஜ்ஞஸ்ச ஸ கதம் பாபம் கரிஷ்யதி’ என்று தர்மமூர்த்தியான ராமன் நிரபராதியான என்னைக்கொல்லமாட்டாரென்று உறுதி கூறினான். ஸுக்ரீவனிடமும், மதங்கரிஷியிடமும் வாலி அபராதம் செய்திருந்தாலும் ஸ்ரீராமனிடம் அவன் ஒரு குற்றமும் செய்தவனல்ல. ஸுக்ரீவன்தான் குற்றம் செய்தவன். அவன் ‘ந ஜாநே நிலயம் தஸ்ய ராவணஸ்ய துராத்மந:’ என்று ராவணன் இருப்பிடம் தனக்குத் தெரியாதென்று பொய் சொன்னான். இவனுக்கு ராவணனை நன்றாகத் தெரியும். ‘த்ருஷ்டா ஹி ஹரய: பூர்வம் மயா விவாதகாங்க்ஷிண: । வாலீ ச ஸஹ ஸுக்ரீவ:’ என்று ராவணனும் சொன்னான். ஆகையினால் ஸுக்ரீவனும் ராவணனைச் சந்தித்திருக்கிறானென்று தெரிகிறது. மேலும் துந்துபி சரீரத்தைக் காலின் பெருவிரலால் நாறுயோஜனை வாரி யெறிந்திருக்கையிலும், தன்னை சரணம் புகுந்து வந்தவன்தானே யென்றெண்ணி ஸாலவ்ருக்ஷத்தைப் பேதிப்பதிலும் ராமனை நியமித்தான். பிறகும் நாலுமாதம் வர்ஷாகாலம் போயும் திரும்பிவாராமலிருந்தான். இது முதலான வெகு குற்றஞ் செய்தவனைக் காப்பாற்றியவர், குற்றமே செய்யாத வாலியைக்கொன்றது தவறு. ‘த்ருஶ்யமானஸ்து யுத்யேதா மயா யதி ந்ருபாத்மஜ । அத்ய வைவஸ்வதம் தேவம் பஶ்யேஸ்த்வம் நிஹதோ மயா’ ‘எதிரில் நின்று யுத்தம் செய்திருந்தாயானால், உன்னை யமனைப்பார்க்கும்படி செய்திருப்பேன்’ என்று வாலி ராமனிடம் கூறுகிறான். ஆகையால் ஒளிந்திருந்து அடித்துக்கொன்றது பிசகு. ஸதாசாரனும் கர்மடனுமான (நித்யகர்மாநுஷ்டாநஞ்செய்

பவனுமான) வாலியை துராசாரனை ஸுக்ரீவனுக்காகக் கொன்றது பெரும் பிழை. ‘கண்டே பத்வா ப்ரதத்யாந்தே நிஹதம் ராவணம் ரணே | ந்யஸ்தாம் இவாஶ்வதரீம் ச்வேதா’ என்று, நியமித்தமாத்திரத்திலே ஆடுமாடுகளைப் போல் ராவணனைக் கழுத்தில் கட்டிக்கொண்டு வந்துவிடுவேன்’ என்று வாலி சொல்லுவதினால், வாலியின் ஸக்யமே உத்தமமாயிருக்க, அவனை வதம் செய்தது பிழை. இது முதலானவை சிலரின் பூர்வபக்ஷம்.

இதற்கு ஸமாதானம்:—‘வாலீ க்ருதாகா: விவிதம் ந வீரோஸ்த்ரஶஸ்த்ரஹத: | ஸூக்ஷ்மதர்மஜ்ஞாநஹீந: ஸீதா ப்ராப்த்யுபாயஹீந: ||’

[‘வாலி ஸ்ரீராமனிடம் பலவிதத்தில் குற்றஞ் செய்தவன். 2. அஸ்த்ரஶஸ்த்ரங்களால் அடிக்கப்பட்டவனுமல்ல. 3. ஸூக்ஷ்மதர்மம், ஸூக்ஷ்ம அறிவு இவை இல்லாதவன். 4. ஸீதையை ஸ்ரீராமனிடம் சேர்ப்பிப்பதென்ற விஷயத்தில் உபாயமேயல்லாதவன்.]

இதன் விளக்கம்:—‘இக்ஷ்வாகூணாமியம் பூமி: ஸஶைலவநகாநநா’ என்று இந்தக் காடும் இக்ஷ்வாகு வம்சத்தாருடையதாகயிருக்க ‘உன் நாட்டுக்கும், உன் நகரத்திற்கும் நான் வெளியிலிருப்பவன்’ என்று வாலி சொன்னது பிறர் பொருளை அபஹரித்தல் என்ற குற்றம். க்ருஷ்ணபரமாத்மாவை ‘பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாம் சைவ மதுஸூதந! | கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷளபோஜநம்’ என்று துர்யோதனன் கேட்டதற்கு ‘த்விஷதந்நம் ந போக்தவ்யம்...... பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா:’ என்று க்ருஷ்ணபரமாத்மா சொன்னபடியாக, ஸ்ரீராமனிடம் ஶரணாகதனையும் ஸ்ரீராமனுக்குப் பிராணன் போன்றவனையுமுள்ள ஸுக்ரீவனுடைய தார, ராஜ்ய, போகங்களைப் பிடுங்கிக்கொண்டு உபத்ரவிப்பதே பெருங்குற்றம். உடன் பிறந்த தம்பிக்கு த்ரோஹம் செய்வது மற்றொரு குற்றம். தார்மிகனை ஒரு அரசன் பார்த்து ஸஹிக்கக்கூடியதல்ல. மண்டலாதிபதியான ஒரு பெரும் அரசன் தன் நாட்டின் அருகாமையில் வந்திருக்க அவரை உபசரிக்காமலிருந்தது ஒரு பெருங்குற்றம். சில நாட்களுக்குமுன் ‘க்ரோஶந்தீம் ராம ராமேதி’ என்று ‘ராம ராம’ என்று பெருங்குரலால் அழுகிற ஸீதையை ராவணன் தூக்கிப்போன விஷயத்தை அறிந்திருந்தும் தன் நண்பன் என்ற காரணத்தினால் அதில் இவன் ஸம்மதித்தேயிருந்தான். அது ஒரு குற்றம்.

ந வீரோஸ்த்ரஶஸ்த்ரஹத:—வாலி யுத்தவீரனல்ல; தநுர்யுத்தம், கதாயுத்தம் ஒன்றும் அறியாதவன். பலாதிகமான வெறும் குரங்கு. அது விளங்கத்தான் வெறும் ஶரத்தாலடித்தார் ராமன். வீரர்களுக்கு ஶரமென்றும், நாராசமென்றும், அஸ்த்ரங்களென்றும் மூன்றுவகை அம்புகளுண்டு. ஶரமென்றால் ஹிமயமலையின் அடிவாரத்தில் முளைத்ததும் கணுநெருங்கியதும் உறுதியானதுமான நாணல்களை நுனியில் சீவி வைத்துக்கொள்ளும் ஆயுதங்கள். நாராசமென்பது இரும்பு மயமான பாணங்கள்; பல்லம், அர்த்தசந்த்ரம் முதலியவைகள். அஸ்த்ரமென்பது மந்த்ரஜபமுள்ள ஐந்த்ரம், ஆக்நேயம், பாஶுபதம் முதலியவைகள். கோலப, மாயாவி, துந்துபி முதலியவர்களுடன் வாலி பல நாட்கள் யுத்தம் செய்து ஜயித்திருந்தாலும், வெகு தூரத்தில் மறைந்திருந்து எறியப்பட்ட ஒரு நாணல் பாணத்தைக் கூடப் பொறுக்க மாட்டாதவன். ஆகையால் யுத்தவீரனல்லவென்பது தெளிவாகிறது. ஸ்ரீமத்ராமாயணத்தில் கிஷ்கிந்தாகாண்டத்தில் 17-வது ஸர்க்கத்தில், வாலியினால் முன் ஸர்க்கத்தில் பலவிதமாய் நிந்திக்கப்பட்டு ஸ்ரீராமர் பதில் சொல்லும்பொழுது ‘உன்னை நான் கொலை செய்ததற்குக் காரணம் இரண்டு. குற்றவாளிகளை அரசர்கள் தண்டிக்கவேண்டும். நீ தம்பியின் ஸம்ஸாரம், ராஜ்யம் இவைகளை அபகரித்துக்கொண்டதால் உன்னைத் தண்டித்தோம். குற்றவாளிகளோடு அரசர்கள் எதிரில் நின்று யுத்தம் செய்யவேண்டுமென்ற அவச்யம் இல்லை. (‘ஸம்ராஜா ஸஹஸா த! ஸ்வயம் நராணாம் வந்யாநாமேவ ராஜாநாம் மாணா’ என்று

ராமன் பரதனிடம் சொல்லிக்கொண்டு வந்தவராகையால் தண்டனை என்பது அவர் செய்யக் கூடியதுதான். அல்லது வாநரமான உன்னை அடித்துக்கொன்றது வேட்டை. வேட்டையில் ஓடினாலும், மறைந்திருந்தும் அடிக்கலாம்' என்று ஸமாதாநம் கூறினார். ராவணனை ஒரு ஸமயம் வாலி பரவசமாய்ப் பிடித்தது தந்திரத்தாலேயே தவிர யுத்தஸாமர்த்யத்தாலல்ல. இந்திரனுடைய வரத்துக்கும் விரோதமில்லாமல் செய்யவேண்டியதுதான் தார்மிக வீரனுடைய கடமை.

[illegible] வாலி [illegible]போல் தன் தேச ஸமீபம் வந்த மண்டலாதிபதியை பூஜிக்கவேண்டுமென்ற அறிவில்லாதவன். தாரை பல தடவை தடுக்கையிலும் அதை நன்குணர்ந்தானில்லை. '[illegible]' என்கிறபடியும் '[illegible]' என்கிற கீதாவசநப்படியும் ஆயுரந்த மேற்பட்ட வாலிக்கு ராமன் பாணம்பட்டது வ்யாஜமாக முடிந்தது. 'தன் காலம் முடிந்து ஆற்றோடு போன அய்யாஸாமி அய்யரின் மரணத்துக்கு, கரையிலிருந்து கூ கூ கூவிய குப்புஸாமி அய்யர் குற்றவாளியானாராம்' என்று ஒரு பழமொழி. அது போல, 'அம்பில் ராமா' என்று எழுதியிருந்த பெயரே இந்த அபவாதத்திற்குக் காரணமாக அமைந்தது. ராமன் குறிபார்த்தும் அடிக்கவில்லை. பல அஸ்த்ரங்களாலும், அநேகநாட்கள் ராவணனுடன் யுத்தம்புரிந்த ராமர் ஒரு சரத்தால் வாலியை அடித்தார்; அவனும் கீழேவிழுந்துவிட்டான். இதன் உண்மையை கவனித்தால் ராமனடித்துக் கொன்றாரென்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள்.

[illegible]ஸீதையைத் திருப்பிக் கொண்டுவரும் விஷயத்தில் வாலி உபயோகமாகவே ஆகமுடியாது. வாலி ராவண ஸக்யத்தால் ராமனுக்கு எதிராகவே வாலி நிற்பான். வாலி தன் தம்பியின் மனைவியையே கொண்டவனாகையினால், 'உங்களிருவருக்கும் ஸீதை வேண்டாம் எனக்கே இருக்கட்டும்' என்றும் சொல்லலாம். மேலும் வாலி ராவணனுக்கு ஸகாவாகையால் யுத்தத்தில் ராவணனுக்கு உதவியாக ராமனுக்கு எதிரியாகவே நிற்பான். அதனால் ஒருக்கால் அவதார கார்யத்திற்கு விக்நமேற்படலாம். '[illegible]' என்று வாலி சொன்னதெல்லாம் வெறும் ஆத்மஸ்தோத்ரமே. அதனால்தான் பிறகு வாலி '[illegible]' என்று அபராத க்ஷமாபணம் செய்துகொண்டான். கம்பரும் இங்கு 'மால்தரும் பிறவி நோய்க்கு மருந்திவன் வணங்கு மைந்தா' என்று திவ்யஜ்ஞாநம் உண்டாகி வாலி அங்கதனுக்குச் சொன்னதாய்ச் சொல்லுகிறார். ஆகையால் அடிபட்டவனும் ஒன்றும் பதிலுக்குச் செய்யமுடியாதவனும் வாயால் திட்டுவது வழக்கமே. இதைக் கொண்டு அறிஞர்கள் வாலிவததோஷத்தை ராமனுக்கு நினைக்கக்கூடாது.

சில சாஸ்த்ரஜ்ஞர் இங்குஒரு விசேஷார்த்தம் சொல்லுவார்கள். '[illegible] ॥' என்கிற ச்லோகத்தில் சரேண என்பதை காரணத்ருதீயை என்று சொல்லலாமல் கர்த்ரு த்ருதீயையாக்கி ப்ரயோஜ்யகர்த்தா என்பார்கள். அப்போது அம்பு குற்றவாளியே தவிர ஸ்ரீராமன் குற்றவாளியல்லவென்பர். மேலும் '[illegible]' என்கிற உபமானத்தால் ஏற்கனவே வேரறுந்த ஒரு மரம் சாய்வதற்கு காற்று வ்யாஜமாகிறதுபோல் ஸ்ரீராமனுடைய சரம் வ்யாஜமே தவிர ஸரியான காரணமல்ல என்பர்.

இந்த விஷயத்தை ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் '[illegible] நிராமயஸி' என்று இந்த விஷயத்தில் ஸ்ரீராமன் குற்றவாளியல்ல என்று ஸத்யமிட்டுள்ளார். அந்த காலத்திலும் அஸத்துக்கள் அபவாதம் சொல்லுகிறார்களென்று அந்த ச்லோகத்தில் மேலே சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கு வாலியின் பூர்வவ்ருத்தாந்தங்களை பல புராணங்களைப் பார்த்து அறிந்த சிலர்

இவ்விதம் கூறுகின்றனர். அதைக் கவனித்தோமானால் வாலியைக்கொன்றது நியாயமென்றே சொல்லலாம். அதாவது:-ப்ரஹ்மாவின் தலையை ருத்ரன் கிள்ளியபொழுது அந்த ப்ரஹ்மகபாலம் கையில் ஒட்டிக்கொண்டது. யத்நங்கள் பல செய்தும் அது கையை விடவில்லை. பிறகு ரிஷிகளைச் சந்தித்துக் கேட்குமளவில், ரத்தபிக்ஷை வாங்கி அதனால் கபாலம் நிறையுமாகில், கபாலம் கையைவிடுமென்று அவர்கள் சொல்லிவிட்டனர். ருத்ரனும் ரத்த பிக்ஷைக்காக பலவிடஞ்சென்று கிடைக்காததினால், கடைசியில் விஷ்ணுவை வருந்திக்கேட்டார். விஷ்ணுவும் சூலத்தால் தோளில் குத்தச்சொல்லி, அப்பொழுது பெருகும் தன் ரத்தத்தினால் கபாலத்தை நிறையச் செய்தார். பிறகு கபாலம் கையை விட்டது. இப்படியிருக்கையில் ப்ரஹ்மா ச்வேத்குண்டலி’ என்பவனை ஸ்ருஷ்டித்து ருத்ரனைக்கொல்ல அனுப்பினார். ருத்ரனும் அவனைப்பார்த்து கபாலத்தில்நிறைந்த ரத்தத்தில் விரலால் சுற்ற ‘ரக்தகுண்டலி’ என்ற ஒருவன் உண்டானான். ரக்தகுண்டலி ச்வேதகுண்டலி, இருவரும் யுத்தம்செய்ய ரக்தகுண்டலி இறந்தான். இந்தவிஷயத்தை ருத்ரன் விஷ்ணுவிடம் ஜ்ஞாபித்து ச்வேதகுண்டலியைக் கொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அப்பொழுது விஷ்ணு தானே அடுத்தஜன்மத்தில் உதவியாக இருந்து ச்வேதகுண்டலியை வதம் செய்வதாக உறுதி சொன்னார். அதனால் ஸுக்ரீவனுக்கு உதவியாய் வாலியை வதம் செய்யவேண்டியதாயிற்று. வாலியே ஜன்மாந்தரத்தில் ச்வேதகுண்டலி என்பவன். ஸுக்ரீவன் ரக்தகுண்டலி என்பவன். இதுவிஷயத்தை வால்மிகி பகவான் கிஷ்கிந்தாகாண்டத்தில் 16-வது ஸர்கம் 32-வது ச்லோகத்தில் ‘வயகாரணாத்’ என்று ஸூசித்திருக்கிறார்.

—*—

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

# ஸதுபதேசம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான்
ஸ்ரீ. உப. முக்கூர், ராஜகோபாலாசார்யஸ்வாமி, திருவள்ளூர்]

**ஆசார்யன்**—ஸாரமாகச் சொல்லுகிறேன் கேள். கர்மஸம்பந்தமான பிறவியில்லாதவன் தன்னுடைய ஸங்கல்பத்தினாலேயே அவதரிக்கிறவன். எந்த அவதாரத்திலும் ஸகல கல்யாணகுண பரிபூர்ணன். அதர்மம் ஓங்கி தர்மம் மிகவும் குறைந்துபோகும் ஸமயந்தான் அவன் அவதரிக்கும் ஸமயம். துஷ்டர்களை அழித்தும் சிலவிடங்களில் துஷ்டத்தனத்தை அழித்தும் பெரியோர்களுக்கு ஸேவை தந்தும் ரக்ஷிப்பதையே முக்யமான பயனாகக் கருதுகிறவன். தர்மத்தை நிலைநாட்டுகிறவன். அவனுடைய ஸொத்தான இந்த ப்ரஹ்மாண்டத்தை எவ்விதத்தினாலும் ரக்ஷிக்கிறவன். வர்ணாச்ரமதர்மங்களை எந்த யுகங்களிலும் அழியாமல் காப்பாற்றுகிறவன். தன்னிடத்தில் எவ்வளவோகல்பகோடிகாலம் பக்தி செய்த ப்ரஹ்மா சிவன் இந்த்ரன் முதலியோருக்கு மிக உயர்ந்த பதவியைக் கொடுத்தவன். எத்தனை ஸங்கடங்கள் நேர்ந்தாலும் லக்ஷ்யம் செய்யாமல் சரணமடைந்தவர்களை வலதுகை கொடுத்துத் தூக்கி ரக்ஷிக்கிறவன். இந்த விஷயங்கள் எல்லாம் கீதையில் 4-வது அத்யாயத்தில் ‘யதாயதாஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத!। அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்.’। ‘பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம், தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே.’ என்று ஸாதித்திருக்கிறார் ஸ்ரீக்ருஷ்ணன்.

சிஷ்யன்—கடவுள் என்று தனியாக ஒருவர் வேண்டுமா?

ஆசா—ஒவ்வொருவரும் கடவுளா?

சிஷ்—இல்லை. ஒருவன் தான்.

ஆசா—யாராக யிருக்கலாம்?

சிஷ்—எல்லோரையும் அடக்கி ஆள சக்தியுள்ளவன் எவனோ அவன் தான்.

ஆசா—அதைத்தான் உனக்குச்சொன்னேன் பகவான் என்று.

சிஷ்—மிகவும் சக்தியுள்ளவன் பகவான் என்று சொன்னீர்கள். ஒரு காமதேநு என்கிற பசு தன் உடம்பிலிருந்து ஆயிரக்கணக்கானபேர்களை ஸ்ருஷ்டி செய்தது என்றால் எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்க கடவுள் என்று ஒருவர் வேண்டுமோ?

ஆசா—உன் அபிப்ராயம் என்ன சொல்லு பார்ப்போம்.

சிஷ்—என் அபிப்ராயமா? சொல்லுகிறேன். எல்லாவற்றையும் செய்யக்கூடிய ஒரு ஜீவாத்மாவையே கடவுளாகச் சொல்லலாம் என்று தோன்றுகிறது.

ஆசா—(கோபத்துடன்)நமக்குத்தெரிந்த வரையில் இந்த பூமண்டலத்தில் அப்படி யாராவது இருப்பதாகத் தெரிகிறதா? கேள்விப்பட்டாவது இருக்கிறாயா?

சிஷ்—'ஸமோஹம் ஸர்வபூதேஷு' என்று பகவான் சொன்னபடி எல்லா ப்ராணிகளிடத்திலும் ஸமான புத்தியை உடைய அநேக பெரியோர்களில் ஒருவரை நாம் ஏன் கடவுளாக எண்ணக்கூடாது?

ஆசா-(சிரித்துக்கொண்டு, 'இவனையாரோ கலைக்கிறார்கள், பதில் நன்றாகச் சொல்லுவோம்' என்று எண்ணி) அப்படிப்பட்டவர் இப்பொழுது கடவுளா? வேறு எப்பொழுதாவது கடவுளா? எப்படியும் அவர் கடவுளாக இருக்கமுடியாது. எத்தனைபேரை அவர் ஸ்ருஷ்டிசெய்தார்? அவரைப்போன்ற மற்றவர்களை அவர் ஸ்ருஷ்டிசெய்தாரா? அவர் ஸ்ருஷ்டிசெய்தால் அவருக்கு ஸமமாக மற்றவர்கள் எப்படியாவார்கள்? எல்லோரையும் ஸ்ருஷ்டிப்பவரல்லவோ கடவுளாவார்? ஆகையால் அவரை பெரிய மஹான் என்று நினைத்துக்கொள்ளு. அவர் கடவுளாக ஆகமாட்டார் என்பதற்கு இன்னும் மனேகவித காரணங்க ளிருக்கின்றன. நினைத்துப்பார் உனக்கே நன்றாகத் தெரிந்துவிடும். ஆகையால் இந்த பூமண்டலத்தில் உள்ளவர்கள் நாம் கேட்டவரைக்கும் பார்த்தவரைக்கும் ஒவ்வொரு கார்யங்களில் அநேகம் பேர்களை ஸஹாயமாக வைத்துக்கொண்டு ப்ரஸித்தியடைந்தவர்களேயொழிய நினைத்த காரியங்களைத் தன்னிஷ்டப்படி செய்ய சக்தி அற்றவர்கள் என்று நன்றாகத் தெரிகிறது.

சிஷ்—ஆனால் தேவதைகளில்தான் யாராவது ஒருவர் கடவுளாக இருக்கட்டுமே.

ஆசா-தேவதைகள் உண்டென்று உனக்கு எப்படித் தெரிகிறது? நேரில் பார்த்தாயா?

சிஷ்—இல்லை,மாஸ்த்ரத்தால்தான் தேவதைகள் உண்டென்று அறிகிறோம்.

ஆசா—நீ எப்போது மாஸ்த்ரத்தினால் தான் அறியவேண்டுமென்று சொன்னாயோ அப்பொழுதே உன் அபிப்ராயம் நிலைக்காது என்று தீர்மானம் செய்துகொள்.

சிஷ்—என் ஸ்வாமிந்! என்பக்கந்தான் ஜயிக்கும். விச்வாமித்ரரை எடுத்துக்கொள்ளுங்கள். அவரை ஏன் கடவுள் என்று சொல்லக்கூடாது. நீங்கள் கடவுள் அவதாரம் என்று சொல்லுகிற ராமனுக்கே அவர் மந்த்ரங்கள் எல்லாம் சொல்லிக்கொடுத்திருக்கிறாரே.

ஆசா—விச்வாமித்ரர் போட்ட அஸ்த்ரங்கள் மஸ்த்ரங்கள் ப்ரஹ்மாஸ்த்ரம் எல்லாவற்றையும் வஸிஷ்டர் என்கிற தலைபாட்டிக்கிழவர் தன் கையிலிருந்த வேணு தண்டத்தினால் உள்ளே இழுத்து அடக்கிவிட்டாரே! யார் கடவுள்? வஸிஷ்டரா, விச்வாமித்ராரா?

சிஷ்—நான் விச்வாமித்ரரை எப்போது கடவுள் என்று சொன்னேன். பிறகு எவ்வளவோ தபஸ் பண்ணி பெரியபெயர் வாங்கின பிறகு அல்லவோ கடவுள் என்று நான் சொல்லுகிறேன்.

ஆசா— பிறகு கடவுளாக ஆகிவிட்டாரோ! மிகவும் கெட்டிக்காரன் நீ. அவர் யாரை உத்தேசித்து தபஸ் செய்து பெரியபெயர் வாங்கினார் தெரியுமா?

சிஷ்—என் ஸ்வாமி தெரியாது? ப்ரஹ்மாவை உத்தேசித்துத்தான் தபஸ் பண்ணி பெரிய பெயர் வாங்கினார்.

ஆசா—யோசித்துப்பார் பேர் வாங்கினவர் கடவுளா பெயர்கொடுத்த ப்ரஹ்மதேவன் கடவுளா? சொல்லு.

சிஷ்—அவர்தான் கடவுளாக இருக்கட்டுமே.

ஆசா—புஸ்தகங்களை நன்றாகப் படித்துப் பார்.. அவர் அந்த ப்ரஹ்மபதவிக்கு எப்படி வந்தார் என்று தெரியும்.

சிஷ் — நீங்கள்தான் சொல்லுங்கள். நான் இப்போது எங்கே புஸ்தகம் பார்கப் போகிறேன்.

ஆசா—சொல்லுகிறேன்:— 'யுககோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ: | புநஸ்த்ரைலோக்ய தாத்ருத்வம் ப்ராப்தவாநிதி ஶுச்ரும |' எத்தனையோ ஆயிரக்கணக்கான வர்ஷங்கள் விஷ்ணு என்கிற ஒருவரைப் பூஜை செய்து அவரிடத்திலிருந்து மறுபடி இந்தப் பதவியை அடைந்தார் என்றல்லவோ ஶாஸ்த்ரங்கள் சொல்லுகிறதுகள். அப்போது ப்ரஹ்மா கடவுளா? அவருக்கு உயர்ந்த வேலை கொடுத்த விஷ்ணு கடவுளா? யோசித்துப் பார்.

சிஷ்—ஸ்வாமிந்! கடவுளே வேண்டாம்; எல்லாவற்றையும் இயற்கையால் உண்டாகிறது என்று சொல்லிவிடுவோமே.

ஆசா—இயற்கை என்றால் என்னவென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்?

சிஷ்—எல்லாவஸ்துவும் தானாகவே உண்டாகிறது என்றுதான் அர்த்தம்.

ஆசா—நன்றாய் யோசித்துச் சொல்லவேண்டும். பருத்திச்செடியில் பஞ்சு உன் மதப்படி இயற்கையாக உண்டாயிற்று. பிறகு நூல் எப்படி உண்டாயிற்று? வேஷ்டிகள் புடவைகள் நூல் கயிறுகள் முதலியனவெல்லாம் எப்படி உண்டாயின? அதைப்போல் கரும்புச்செடியில் கருப்பஞ்சாறு இயற்கையாக உண்டானதாக வைத்துக் கொள்வோம். அதை வெல்லமாகவும் சர்க்கரையாகவும் கற்கண்டாகவும் செய்தது இயற்கையல்லவென்பது உனக்கே தோன்றவில்லையா? விதைகளிலிருந்து முளைகள் கிளம்புவது இயற்கையாக வைத்துக்கொள்வோம். அவ் விதைகளுக்கும் ஜலத்திற்கும் ஸம்பந்தத்தை ஒருவன் ஏற்படுத்தினால்தானே முளைக்கிறதுகள். மழை பெய்வது இயற்கையான சில காரணங்களால் என்று சொல்லுகிறார்களல்லவா? அந்த இயற்கையான காரணங்கள் இப்போது நாலைந்து வருஷங்களாக எங்கேபோய்விட்டதுகள்? போகச்சொன்னது யார்? செயற்கையில்லாமல் இயற்கை என்பது எங்கும் உண்டாகாது. எதையும் நன்றாக யோசித்துப்பார். இயற்கையானது நம்மால் மாற்றக்கூடியதா? இல்லையா? என்ன நினைக்கிறாய்?

சிஷ்—மாற்ற முடியாது என்று என் அபிப்ராயம்.

ஆசா — யோசிக்காமல் பதில் சொல்லுகிறாய். தெரியவில்லை என்று பதில்சொன்னால் நன்றாக இருக்கும். ஜலத்திற்கு உண்டான இயற்கைகுணம் என்ன?

சிஷ்—குளிர்ச்சி.

ஆசா—இந்த இயற்கையான குளிர்ச்சியை மாற்றி உஷ்ணத்தையுண்டுபண்ணி, தொடவும் முடியாமலிருக்கும்படி செய்கிறோமல்லவா? இத்துடன் விடு. நம் மதப்படி தெரிந்துகொள்ளவேண்டியவை மிகவும் அதிகமாக இருக்கின்றன. அதைத் தெரிந்துகொண்டு பிறகு வேறு கேள்விகள் கேட்டால் நன்றாக இருக்கும்.

சிஷ—ஸரி; பகவான் மனிதனாகவும் மிருகங்களாகவும் இப்படிப் பலவிதமாக எதற்காக அவதரிக்க வேண்டும்?

ஆசா—எந்த இடத்திலும் எந்த விதத்திலும் எந்தக்காலத்திலும் எந்தக்கார்யத்திலும் எந்தவிதமான குறைவும் இல்லாமல் ஸகலவிதமான மேன்மையோடு இருக்கிறான் பகவான் என்று ஶாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது. அதையெல்லாம் பக்தர்களுக்கு உண்மை என்று காட்டி அவர்களுக்கு மேன்மேலும் அதிக பக்தியை உண்டுபண்ணி நல்லகதி கொடுத்து ஆநந்திக்கும்படி செய்வதற்காகத்தான் அனேகவிதமாக அவன் அவதாரஞ் செய்கிறான்.

சிஷ்—எனக்கு ஸரியாகத் தோன்றவில்லை. அவனவதரிக்காமலிருந்தால் எவ்வளவு மேன்மையுண்டோ அவ்வளவுமேன்மை அவ

தரித்தால் இல்லைபோல் தோன்றுகிறது. ராமாவதாரத்தை எடுத்துக்கொள்ளுவோம். அதில் முதலிலிருந்து கடைசிவரைக்கும் நன்றாய்ப் பார்த்தால் இவர் கடவுள் அல்ல என்று சொல்லும்படி தோன்றுகிறது.

ஆசா—(சிரித்துக்கொண்டு) ஆராய்ச்சி நீயாகவே செய்தாயோ அல்லது உன்னைப் போல் யாருடனாவது சேர்ந்து ஆராய்ச்சி செய்து தீர்மானம் செய்துவிட்டாயா?

சிஷ்—ஸ்வாமிந்! நானும் தீர்மானம் செய்யவில்லை என்போன்ற முட்டாளும் சொல்லவில்லை மிகப்பெரியவர்கள் சொல்லித்தான் நான் சொல்லுகிறேன்.

ஆசா—உன் மனத்தில் இருக்கும் விஷயத்தைச் சொல்லு. பதில் சொல்லுகிறேன். நன்றாகத் தெரிந்துகொள்.

சிஷ்—ஒரு பெரிய சூரனை அரசன் என்று சொல்வதற்குமேல் என்ன சொல்ல முடியும்?

ஆசா—உன்னைப்போல் பேசுகிறவர்களுடன் பேசவேகூடாது. நீ ஆரம்பித்தது பகவான் அவதரிப்பதால் அவருக்குக் குறைவுதான் ஏற்படுகிறது என்று. இப்போது கேள்வி ஒருபெரிய சூரனை அரசனாகத்தான் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறாய். இது ஸரியாக இருக்கிறதா?

சிஷ்—இல்லை, இதைப் பிறகு கேட்கிறேன்; பகவான்என்றே வைத்துக்கொண்டு கேட்கிறேன். அந்த அவதாரத்தில் அவருக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் எவ்வளவு? அதனால் அவர் வருத்தப்பட்டது எவ்வளவு? இவற்றையெல்லாம் அடியேன் ஒருதடவை எடுத்துச்சொல்ல வேண்டுமா? தங்களுக்கே தெரிந்த விஷயங்தானே.

ஆசா—நீ கேட்டதும் ஸரி. உன்னைப் போலுள்ளவர்கள் நினைப்பதும் ஸரிதான். ஒரு ஸாரமான பதில் சொல்லுகிறேன் கேள். நீ நல்ல புத்திசாலி என்பது எனக்கு நன்றாய்த் தெரிந்தவிஷயம். நன்றாய் ஆராய்ந்து பார். ஆனால் கொஞ்சம் ஶாஸ்த்ரங்கள் படித்திருந்தால் நாமாகச் சில யோசனைகள் செய்ய ஸுலபமாக இருக்கும். ஆனாலும் சொல்லுகிறேன். ஒருவிஷயத்தைப்பற்றி ஶாஸ்த்ரங்களில் பலவிதமாகச் சொல்லியிருந்தால் எல்லாவற்றையும் எல்லாவற்றிற்கும் பொருந்தும்படி அர்த்தம் சொல்ல வேண்டுமேயல்லது 'அதை விட்டுவிடுகிறேன் இதை விட்டுவிடுகிறேன்' என்று சொல்லக்கூடாது. ஆகையால் அவதரிக்கும்போதெல்லாம் ஸகலவித குணங்களோடும் ஒன்றிலும் குறைவில்லாமல் அவதரிக்கிறான் என்று கீதை முதலிய ஶாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது. முன்னமே உனக்குச் சொல்லியிருக்கிறேன். 'ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி ஆத்மமாயயா' என்று நான்காவது அத்யாயத்தில் இருக்கிறது. ராமாவதாரம் சொல்லுகிற இடத்தில் புத்ரகாமேஷ்டி பண்ணுகிற ஸமயத்தில் என்ன நடந்துள்ளது? அதையும் நன்றாகப்பார். தேவதைகள் கூடி யோசித்துக் கொண்டிருக்கும் ஸமயம் ஶங்க சக்ர கதாபாணியாய் பீதாம்பரதாரியாய் ஸாக்ஷாத் ஜகத்பதியான பரமாத்மா வந்ததாகவும், அவரை எல்லா தேவதைகளும் சேர்ந்து ராவணவதத்திற்காக தசரதபுத்ரனைப் பிறக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகவும், பகவானும் அதற்கிணங்கி அவர்களுக்கு அபயமளித்ததாகவும் அந்த ராமாயணத்திலேயே இருக்கிறது. கடைசியில் ராவணவதம் ஆனபிறகு ப்ரஹ்மாதி தேவதைகள் இந்த ராமனைப்பார்த்து 'நீ நாராயணன்; ஸீதை மஹாலக்ஷ்மி; இருவரும்சேர்ந்து எங்களைக் காப்பாற்றி விட்டீர்கள்' என்றும் சொல்லுகிறார்கள். நடுவில் மண்டோதரி இந்த ராமனை 'தமஸ: பரமோ தாதா ஶங்கசக்ரகதாதர:' என்று ஆரம்பித்து ஸ்தோத்திரத்தில் இவருடைய வாஸ்தவமான அவதாரத்தை எடுத்து லோகத்தார் அறியக் காட்டியிருக்கிறாள். இவை எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு எல்லாவற்றிற்கும் பொருந்தும்படி அர்த்தம் பார்த்தால் உனக்கு எங்கெந்த இடத்தில் ராமனைப்பற்றி இளப்பமாகத் தோன்றுகிறதோ அதற்கெல்லாம் உனக்கே ஸமாதானம் சொல்லத் தெரிந்துவிடும். வேதத்திலும் பகவான் 'அவதரிப்பதால் அவனுக்கு ச்ரேயஸ் அதிகமாகிறதேயொழிய குறைகிறதில்லை' என்று ஸாரமாக சால்லியிருக்கிறது. ஒரு அரசன் தானிருக் ண்டிய இடத்தை

விட்டு தன்னுடைய ப்ரஜைகளிருக்கிற இடத்திற்குவந்து கஷ்ட நஷ்டங்களைஸஹித்துக்கொண்டு ப்ரஜைகளுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை நிவர்த்தித்து ஸுகங்கள் வரும்படியான பல கார்யங்களைச்செய்தால் அவ்வரசனுக்கு எவ்வளவு கீர்த்தி அதிகமாகுமோ, ஜனங்கள் எவ்வளவு அவனிடத்தில் ஈடுபடுவார்களோ அம்மாதிரி பகவானும் இருக்கவேண்டிய இடத்தைவிட்டு அவதாரங்களைச் செய்து அந்தந்த இடங்களில் ஸுகதுக்க பாவனைகளைச் செய்து பக்தர்களைரக்ஷிப்பதால் அவனுக்கு அதிகமான ச்ரேயஸ்ஸோடு எல்லோரும் அவனிடத்தில் அதிக ப்ரீதியோடு ஆராதித்து நல்லகதி அடைவார்கள் என்று ஸாரமாக வேதங்களிலும் சொல்லியிருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தாயானல் எந்த அவதாரத்திலும் எவ்விதக்குறையும் சொல்லத் தோன்ருது. அவகாசம் ஏற்பட்டபோது நன்ருகப் பார்த்துவிட்டு இவ்வளவிலும் உனக்குத் தெரிந்துகொள்ள முடியாவிட்டால் பிறகு என்னைக் கேள். அவைகளை வைத்துக்கொண்டே உனக்கு நன்ருகத் தெரியும்படி சொல்லுகிறேன்.

சிஷ்—ஸ்வாமிந்! இப்போதே எனக்கு அனேகமாகப் புரிந்துவிட்டது. வேதம், கீதை, விஷ்ணுபுராணம், பாகவதம் முதலிய க்ரந்தங்களில் பகவானைப்பற்றி என்னசொல்லி இருக்கிறதோ அதை முக்யமாக வைத்துக் கொண்டு அவதாரங்களில் தோன்றக்கூடிய சில விஷயங்களுக்கு நமக்குத்தோன்றுகிறபடியோ அல்லது இதர ஶாஸ்த்ரங்களில் சொல்லுகிறபடியோ ஒருவிதக்குறைவும் இல்லை என்று தீர்மானம் செய்துகொள்வதுதான் ஶாஸ்த்ரங்களை ஆராய்ச்சிபண்ணத் தெரிந்துகொள்பவர்களுடைய கடமை என்று தோன்றுகிறது. இன்னும் நன்ருகப்பார்த்து நன்ருகத் தெரிந்துகொண்டு ஒவ்வோரிடத்திற்கும் பதில் சொல்லுகிறேன்.

ஆசா—ஸந்தோஷம். ஆகையால் அதைப்பற்றி பிறகு பார்த்துக்கொள்வோம். அநேகவிதமான அவதாரங்களுக்கு இன்னுமோர் காரணம் நான் சொல்லுகிறேன். அந்த பகவானுக்கு அழகிலோ குணங்களிலோ சக்தியிலோ எவ்விதத்திலும் யாரையும் ஸமமாகச் சொல்லமுடியாதுஎன்று ஶாஸ்த்ரங்கள் சொல்லுகிறதுகள். அதை லோகத்துக்கு அப்படியே எந்தமாதிரி அவதரித்தாலும் அழகு முதலானதுகளில் எவ்வித குறையுமில்லாமையைக் காட்டி அவர்களை ஆநந்திக்கச்செய்து தன்னிடத்தில் ஈடுபடுத்தி அவர்களுக்கு அநுக்ரஹம் செய்வதற்காக பகவான் அனேகவிதமான அவதாரம் செய்கிருன் என்றும் ஒருவிதமாகச் சொல்லலாம். ஆனல் 'இச்சாக்ருஹீதாபிமதோரு தேஹ:' (தன்னிஷ்டப்படி தன் ஸங்கல்பத்தால் தனக்கும் பக்தர்களுக்கும் அபிமதமான நானுவித ஶரீரங்களை எடுத்துக்கொள்கிருன்) என்று ஶாஸ்த்ரங்கள் சொல்லுகிறதுகள்.

(தொடரும்)

---

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் சந்தாவைப் பலர் க்ரமப்படி முன்பணமாக அனுப்பி வைக்கிருர்கள். சில அன்பர்கள் 1952-ம் வருஷத்திற்குக் கூட சந்தாவை முன்னதாகவே அனுப்பியிருக்கிருர்கள். நீங்கள் பாக்கியில்லாமல் அனுப்பிவிட்டீர்களா? இல்லாவிட்டால் உடனே அனுப்பிவைக்குமாறு ப்ரார்த்திக்கிருேம்.

* * * * *

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# புயலும் பொறுமையும்

(10-வது ஸம்புடம் 6-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M.A., வித்வான், L.T., ஸம்ஸ்க்ருதகலாசாலை திருவையாறு.]

காவலிலிருந்த பார்த்தஸாரதியின் மனக் கவலையை யார் வர்ணிக்கமுடியும்? துயரத்தினால் பாறையாகிக்கிடந்த அவன் உள்ளத்தில் அடிப்படையில் கொந்தளித்த அன்பு இரக்கம் முதலிய உணர்ச்சிகள் திடீரெனக் கொழுந்துவிட்டு ஜ்வலிக்க ஆரம்பித்தன. தான் செய்த தவறுதலான ப்ரசாரத்தினால் தன் குடும்பத்திற்கு வந்த ஆபத்தைக் கவனித்தான். ஸம்பந்தமில்லாத ஓர் கொலைக்குற்றத்தில் தான் மாட்டிக்கொண்டதை உணர்ந்தான். போலீஸ்காரர்களின் அடியினால் வேதனை உண்டான். தன் குழந்தைகளை யார் கவனித்துக்கொள்வார்? தன் மனைவியின் கதி யாது? பசியினாலும் பிணியினாலும் தன் குடும்பம் அநியாயமாய் அழியும்படி கடவுள்... ஆ! கடவுள்' அவன் மனத்தில் கடவுள் உணர்ச்சி பளிச்சென எழுந்தது! படித்தவனாகையால் சற்று யோசித்தான். நன்கு யோசித்தான். பரந்த இவ்வுலகத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் ஏதோ தற்செயலாக நிகழ்கின்றன என்று நினைப்பதற்கில்லையே! கதிரவன் எழுவதும், பயிர்பச்சை செழிப்பதும், பைம்புனல் பாய்வதும், மெல்லிய காற்று அடிப்பதும், மழை பொழிவதும். வையகம் களிப்பதும், கொடுங்கால் வீசுவதும், மழை நிற்பதும், பஞ்சம் பிணி பரவுவதும் இவை யாவும் தற்செயலாகத் தோன்றவில்லையே. நிறைந்த அறிவும் ஆற்றலும் ஒளியும் நிறைந்த அருளும் வாய்ந்த ஓர் சக்தி விசேஷம் இப் பிரபஞ்சத்தை இயக்குவதுபோலவே துணியவேண்டியிருக்கிறது. அந்த சக்தி தயாமயமானதென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. உலகந் தோன்றுவதும் தழைப்பதும் ஒடுங்குவதும் அந்தத் தயையினாலல்லவா? யாவற்றையும் படைத்த கடவுள் கருணைமயமான கடவுள். மனிதனிடம் கருணைசக்தியைக் கொடுத்திருக்கிறானா? கொடுத்திருக்கிறான். மனிதனை எப்படி நிறுத்துப்பார்ப்பது? ஒருவர் உள்ளத்தைக்கொண்டுதானே மற்றவர் உள்ளத்தை அறியலாம். தூய உள்ளம் தூய்மையைக் காணும்! கரிய உள்ளம் உலகில் கயமையையே காணும்! உலகிலுள்ள நன்மையைக் காணத் தனக்கு என்ன உரிமை உண்டு என்று யோசித்தான். நம்மிடமுள்ளதுதானே திரும்பி நம்மிடம் வரும்! பார்த்தஸாரதி உலகத்தவர்க்குக் கொடுத்ததென்ன? பொறாமை, வெறுப்பு, வசைச்சொற்கள். இவற்றின் விளைவு என்ன? பாம்பு சென்ற இடமெல்லாம் விஷக்காற்றைப் பரப்பிச் செல்வதுபோல, அழுக்கு தான் பரவுமிடமில்லாமல், பிணியையும் அழிவையும் விளைவிப்பதுபோல, இவனால் உலகத்திற்கு அதிருப்தியும், சுகக்கேடும், முணுமுணுப்பும், ஒழுங்கின்மையும், பசியின்மிகையும் விளைந்தனவேயன்றி நன்மையல்ல! கொள்கைகள்! கொள்கைகளை யார் பரப்பவேண்டும்? ஆற்றலுடையவன் பரப்பவேண்டும். ஆக்கத்தில் ஊக்கமுடையவன் பரப்பவேண்டும். ஒரு வீட்டை எரித்தால் உடனே மக்கள் குடியேற வேறு வசதி உள்ளவன் அவ்வீட்டை அழிக்க வேண்டும். நாச வேலை எளிது. ஆக்க வேலை அரிது. பார்த்தஸாரதியின் உள்ளம் இதையெல்லாம் யோசித்து உழன்றது. நிரபராதியான தனக்கு இந்தக் காவல்நிலை ஏற்பட்டது ஏதோ தற்செயலாகத் தோன்றவில்லை. உலகத்தோர் தனக்கு உதவி செய்யவேண்டுமென எதிர்பார்த்து நிற்கத் தான் உலகத்திற்குக் கொடுத்தது என்ன என்று ஆராய்ந்தான். பணத்தையும் பணமுள்ளவர்களையும் தர்மத்தையும் தர்மசிந்தனையுள்ளவர்களையும் சத்திரம் சாவடி கோவில் குளம் எல்லாவற்றையும் ஒருங்கு நிந்தித்த

தன்னைக் கைதூக்கிவிட யார் முன்வருவார் என்று யோசித்தான். முன்வந்தாலும் அது தர்மமாகுமா என்று ஆராய்ந்தான். கூட்டிலடைக்கப்பட்ட ஸிம்ஹம்போலக் கர்ஜித்தான். பெருமூச்சுவிட்டான்! கைகளைத் தரையில் அறைந்தான்! 'பைசாசங்களே! பணத்தை மூட்டைகட்டிப் பேதைகளை வாட்டும் பேய்களே! உங்கள் புளுகும் வஞ்சகமும் ஓயும் நாள் இல்லையா! பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து, சூதினால் தழைத்து, சூதினைப் பரப்பிப் பிறர் கண்ணில் மண்ணைப்போடும் ராக்ஷஸவர்க்கமே ...... ஆஹா! இதென்ன நான் பேசுவது இலக்கியங்களிலும் பிறநாடுகளிலும் காணும்நிகழ்ச்சிகள் உண்மையாகுமா?'

'ஒரு சமூகமும் சமயமும் கலாசாரமும் யதுநாதன் போல உத்தமர்களை உண்டுபண்ணக் கூடுமானால் அச்சமூகத்தை நிந்திப்பானேன்? களங்கத்தினால் மாத்திரம் சந்திரனுக்கு இழுக்கு உண்டா? விஷத்தினால் பாற்கடல் கெட்டுவிடுமா? இருட்டினால் நாளுக்கு ஒரு குறை வந்துவிடுமா? சமூகம் தன் குறைகளாலேயே அறிவடைந்து வளருகின்றதென்னலாம் போலிருக்கிறதே. ஒளியுடன் நிலவ இருட்டு இன்றியமையாததுபோலத் தோன்றுகிறதே! ப்ரபஞ்சத்தை ஒளிரச்செய்யும் பகல் ஒளிதன்னைப் பின்பற்றிய இருட்டினால்தானே ஒரு நாளை நிறைய வைக்கிறது. ஆக, ப்ரபஞ்சத்தில் குறையில் நிறைவும், துயரில் இன்பமும் பாபத்தில் புண்ணியமும், அழிவில் ஆக்கமும் காணப்படுகிறது. பழைமை பெற்று உறுதியுடன் விளங்கும் அழகிய ஓர் கற்கோட்டையைப் பைத்தியக்காரன்போல நான் என் தகர்க்கமுயன்றேன்? இடிந்து தலையில் விழப் பார்க்கும் கட்டிடங்களைத் தகர்ப்பவரைப் பார்த்துவிட்டு நிழலும் நீரும் உணவும் உயிரும் தருகின்ற ஓர் அழகிய வீட்டை நான் என் இடிக்கவேண்டும்? ஆலமரத்தில் பருக்கைக் கல்லை எறிந்தால்? சந்திரனை நோக்கி நாய் குரைத்தால்? மாமலையைநோக்கி தூசி பரிஹஸித்தால்? என்ன வந்துவிடும்? மரம் சாயுமா? மாமதி தளர்வனா? மலை அசையுமா?'

இத்தகைய எண்ணங்கள் அவன் மனத்தில் சுழன்றன. முதன்முதலாக அருளின் ஒளி அவன் இருண்ட மனத்தில் உதிக்க ஆரம்பித்தது. தன்மனைவியை நினைத்தான். தன்னுடன் வாழ்ந்ததில் அவள் காட்டிய பொறுமையை நினைத்தான், அவளுடைய அன்பை நினைத்தான். தன்னிடமும் மக்களிடமும் அவள்காட்டிய அன்பை நினைத்தான். புராணங்களில் போற்றப்படும் புனிதமான தேவிகளில் ஒருத்தி எனத் துணிந்தான். பணத்தில் புரளும் புருஷனை, பட்டும் மணியும் பொன்னும் வழங்கும் புருஷனை, மாளிகையிலும் தோட்டத்திலும் வைத்துச் சீராட்டும் புருஷனைப் போற்றுபவளா உயர்ந்த பெண்மணி? கண்ணீருடன் எழுந்து, வசையும் அடியும் துணையாகித் துயரத்திலே உழன்று, பசியையும் பிணியையும் தோழமைக்கொண்டு, கண்ணீரிலேயே துயிலும் பெண்மணி கணவனுக்குப் பணிவிடை செய்தால் அவளல்லவா பெண்! பட்டாடைகளணிந்து, புலிப்பால் வேண்டுமானாலும் பெற்று, வைரமும் பொன்னும் பூண்டு, செவிலியர் தாதியர் தொண்டு செய்ய வாழ்ந்து, தாயின் பாலையும் குடித்தறியாது விலைத்தாயார் முலைப்பாலில் வளர்ந்து, செழுந்திருவிலே தழைத்து, தாயிடம் கோயில் கொண்ட தெய்வத்தினிடம் வருவதுபோல் சற்றுநேரம் வருகின்றகுழந்தைகளிடம் அன்புகாட்டும் தாயும் ஒரு தாயா? கண்குவிந்து பசியால் அழும் மகவினை மார்புறவணைத்து, அதற்குப் பால்கொடுக்கப்பஞ்சத்தினாலுலர்ந்து ஈரமற்ற கொங்கையைச் சுவைத்து, ஏதும் பெறாது வீங்கியழுகின்ற அம்மகவை அணைத்து முத்தமிடுபவளல்லவா தாய்? இத்தகைய பெண்மணி பசியினால் துடிப்பதைத் தன்னகத்தே கண்டான். உலகமக்கள் உண்டு உடுப்பதெல்லாம் தன்னைப் பரிஹஸிக்கவே என்று நினைத்தான். அவனுள்ளத்தில் பூகம்பமெழுவதுபோன்ற அதிர்ச்சி உண்டாகியது. குனிந்து தரையில் விழுந்தான். கைகளை முகத்தில் அறைந்துகொண்டான். விசாரணை ஆரம்பமானால் தன்னைக் குற்றவாளியாக்கித் தூக்கிவிடுவார்களோ தீவாந்தரம் அனுப்புவார்களோ என்று நினைத்தான். வீட்டைவிட்டு வந்து புரிந்து நொந்த அவன் உள்ளத்தே தன் குடும்பத்தில் தான் நேரில் காட்டாத

ஒரு அன்புச்சுடர் கொழுந்துவிட்டெரிந்தது. உலகில் நீதியுண்டா! ஸத்யமுண்டா! தெய்வமுண்டா! பார்த்தஸாரதியின் சிவந்த கண்களிலிருந்து முதன்முதலாகக் கொதிக்கும் கண்ணீர் வடிந்தது. மேலே பார்த்தான்! கீழே பார்த்தான்! ‘பொறுமை, த்யாகம், உண்மை, நம்பிக்கை இவையெல்லாம் வீண்! வீண்!! உலகம் தான்போகும் இருண்ட வழியிலேயே செல்கிறது’ என்று புலம்பினான். துயரத்தினாலும் களைப்பினாலும் மூர்ச்சித்துக் கிடந்தான்.

இரவு பன்னிரண்டுமணி இருக்கலாம். போலீஸ் ஸ்டேஷனின் விளக்குவெளிச்சம் சிறிது மங்கலாக அவனது காவற்கூடத்தில் விழுந்தது. பருத்த இரும்புக்கம்பிகளின் நீண்ட நிழல், அவனை ஆக்ரமிக்கச் சமயம்பார்த்து நின்ற பேய்களின் நிழல் வடிவம்போல உட்புறம் வரிவரியாகத் தாண்டவமாடியது. யாரோ வரும் அடிச்சத்தம் கேட்டுக் கண்ணீரால் நனைந்த தன் ஏங்கிய முகத்தை நிமிர்த்து நோக்கினான். கம்பிகளுக்கு வெளியே யதுநாதன் நின்றார்! யதுநாதனைக் கண்டவுடன் அவன் உடலில் மின்சாரம் பாய்வதுபோன்ற ஒரு உணர்ச்சி உண்டாயிற்று. மங்கலான வெளிச்சத்தில் பால்போன்ற அவரது திருமேனியும் அதைஒத்து அணியப்பட்ட அழகிய வெள்ளிய ஆடையும், த்வாதச ஊர்த்வ புண்ட்ரமும் அந்த காவற்கூடத்திற்கே ஒரு புத்தொளியையுண்டாக்கியது. பாதாளத்தில் பரிதிபோல், குகையில் வஜ்ரகண்டம்போல், நரகத்தில் நித்ய ஸூரி நின்றதுபோல் அப்புனிதர் அங்கு நின்றார்.

பார்த்தஸாரதியைக் கண்டு அவர் மனம் என்ன உணர்ச்சி அடைந்ததோ. உடல் குலுங்கக்குலுங்க அவரும் மனத்தெழுந்த மாபெரும் உணர்ச்சியை அடக்கிக்கொண்டவர்போல் தோன்றிற்று. யதுநாதனைக்கண்ட பார்த்தஸாரதி தன் சக்திக்குமீறிய ஒரு குரலில் ‘வாரும், என்னைப்பார்க்க வந்தீரல்லவா? உமது கண் குளிர்ந்ததா? உள்ளம் மகிழ்ந்ததா? ஊரில் என் நிலைமையைக் கண்டது போதாமல் இங்கே காவற்கூடத்தில் நான் படும் பாட்டையும் பார்க்க வந்தீரல்லவா? இப்போது நான் உமக்கு நிறைந்த வேடிக்கை; நல்ல கண்காட்சி. இதோ முதுகில் பாரும் நான் பட்ட அடிகள்; இதோ என் விலாவில் நான் பட்ட உதைகள். ஸந்தோஷமாயிற்றா? உம்மைப்போல் பணக்காரன் நான் கண்டதில்லை. என்னைத் துரத்திவந்து என் துயரத்தைக் கண்ணுற்று மகிழவேண்டுமென்று வந்தீரல்லவா? ஐயா! உம் மனம் மகிழும்படி பாரும். ஏன் தனியாக வந்தீர்? உமது ஆசைக்கிளி... அவளையும் அழைத்துவரக்கூடாது? ‘ஏக:ஸ்வாது ந புஞ்ஜீத’ என்று சொல்வார்களே! இந்த இனிய காட்சியை அவள் ஏன் பாராதிருக்க வேண்டும்? என் வீட்டிற்குப்போய் பார்த்திருப்பீர். துக்கத்திலும் களைப்பிலும் புரண்டு வாடும் என் மனைவியையும், அவள் பக்கத்திலிருந்து ‘அம்மா அம்மா’ என்று சித்ரவதை செய்யும் என் மக்களையும் பார்த்துவிட்டு என்னையும் கண்டு உமது மனக்களிப்பைப் பூர்த்தி செய்துகொள்ள வந்தீரல்லவா! இதோபாரும் எலும்புக்கூடாகிய என் உடலையும் துயரின் தொடரால் உளுத்துக் கூடாகிவிட்ட என் அகத்தையும் கண்டு களியுங்கள்.’ பார்த்தஸாரதி சிரித்தான். அவன் சிரிப்பிலே எல்லையற்ற கோபமும் சோகமும் த்வனித்தன. கர்ஜித்தான்; பெருமூச்சு விட்டான்; சற்று அழுதான்; யதுநாதனை நோக்கினான். ‘சண்டாளா! வஞ்சகா! வீண்வாழ்வு வாழும் வம்பனே! ஸமூஹத்தை அட்டைபோல் உறிஞ்சி பசியினால் வாடும் பல்லாயிரவரது உணவையும் இன்பத்தையும் பறித்துக் கொழுத்துத் திரியும் பாதகா! இங்கேயும் வந்தா என்னைக்காண விரும்பினாய்! என் ஏழ்மையினால் இன்புறாத உன் மனம் என் நலிவையும் காணவா அவாவிற்று? நன்று! நன்று! பொய்யை ப்ரசாரம் செய்து பொய்வாழ்க்கை வாழ்ந்து உலகத்தில் இன்பமும் நன்மையும் ஒருங்கே ஒங்குமாறு அநீதச்செயல் நடத்தும் உன்னையும் உன் ஸமூஹத்தையும் நான் மதிக்கும்விதம் இதோபார்!’ என்று கண்களில் நெருப்புப்பொறி பறக்கக் காரியுமிழ்ந்தான். உடலில் வன்மை இல்லாமையால் அவன் வாயில் எழுந்த கோழைத்திரள் கம்பியினால் தடையுண்டு உள்ளே விழுந்தது. ஆயினும் சிதறிய திவலைகள் யதுநாதனது முகத்திலும் மார்பிலும்

விழுந்தன. யதுநாதன் முகத்தையும் மார்பையும் ஜலத்தால் துடைத்துக் கொண்டார். காவற்கூடத்திற்குள்ளேயே முன்னும் பின்னுமாய் நடந்தான் பார்த்தஸாரதி. திடீரெனக் கம்பியை நெருங்கினான். அவனது கம்மிய குரலில் துடிதுடிப்புக் காணப்பட்டது. “ஸாக்ஷிகளெல்லாம் தயாராய்விட்டதா? உமது மாயப் பணத்தைக்கொண்டு அவர்களை வசப்படுத்தி உம்மிஷ்டப்படிச் சொல்லக் கற்பித்து வைத்திருக்கிறீரா? பணம் பாதாளம்வரையில் பாயும்! அழுக்கடைந்த உடைகள்! மெல்லிய பூம்பட்டாடை! இருளடைந்த குகை! பகலிரவு தெரியாத பலஅடுக்கு மாளிகை! உடலை அறுக்கும் பசி! பசியே எழாத கொழுத்த உடல்! ஏக்கமுற்ற மனம்! இரக்கமற்ற உள்ளம்! பழிகாரா! எங்களுக்கும் உங்களுக்கும் இயைபு ஏது? என் மனைவியைப்பார்த்துப் பேசினையல்லவா? ‘தெய்வத்ரோஹியை மணந்துகொண்டு இத்தனையும் அனுபவிக்கிறாய்’ என்று கேட்டீரல்லவா? இத்தனை பசியிலும் பிணியிலும் அவளிடம் தோன்றும் அழகினை உமது காமமயமான பார்வைகளால் பருகினீரல்லவா? ஆஷாடபூதி!” எனும்போது யதுநாதன் தன் காதைப் பொத்திக்கொண்டார். தலைகுனிந்தார். கம்பியின்மேல் சாய்ந்தார்.

பார்த்தஸாரதி மேலும் சொன்னான்:— பழிகாரா! பாதகா! உனக்கென்ன இங்கே வேலை? என்னைப்பார்த்துக் களித்துவிட்டாயல்லவா? போ! ஏழைகளின் குடலிலிருந்து பிடுங்கி எடுக்கப்பட்ட பைம்பொன் திரள்கொண்டு நீ வாங்கிவைத்திருக்கும் மோட்டார் வண்டியில் செல். நாசகாலா! அழிவின் வடிவமே! அயோக்ய சிகாமணி! ஒருக்கால் எனக்கு விசாரணையே தேவையில்லையென்று....’ எனும்போது ஸப் இன்ஸ்பெக்டர் அருகே வந்தார். ‘ஸ்வாமி! ஏதோ குடும்பப்பேச்சாகப் பேசுவீர்களென்று தங்களை இந்த மிருகத்துடன் தனியாக விட்டுவைத்தேன். இவன் செய்யும் அட்டஹாஸத்தைப் பார்த்தால்.... ஏ! தொண்ணூற்றாறு இப்படிவா’ என்றார். யதுநாதன் அவரது கையைப்பிடித்து நிறுத்தினார். பார்த்தஸாரதி தன் கைகளைக் கூப்பிக்கொண்டு ‘இன்ஸ்பெக்டர்வாள்! நீங்கள் நல்லவர்கள், அடித்த கான்ஸ்டேபிள்களைக்கூடக் கொஞ்சம் நேற்று தடுத்தீர்கள். இதோ இந்த நயவஞ்சகனைத்தான் வைகிறேன். இந்த த்ரோஹியை ஏசுகிறேன். உங்களைச் சொல்லுவேனா? அடே துராசாரா! எனக்கு விசாரணையே தேவையில்லை என்று ஏற்பாடு செய்துவிட்டாயா?’ என்றான். அவன் உடல் துடித்தது. குரல் குமுறிற்று.

‘ஆமாம்’ என்றார் யதுநாதன். பார்த்தஸாரதி, ஸப் இன்ஸ்பெக்டரின் அதட்டிய குரலையும் லக்ஷ்யம்செய்யாது கம்பிகளை அறைந்தான். ‘ஆமாம்!’ என்ன அழுத்தம், என்ன உறுதி! உன் வெறுப்பை நான் அறிவேன், உன் வஞ்சகம் நான் அறிவேன். எனக்கு விசாரணையில்லாமலே மரணதண்டனைச் சீட்டு; என்னைத் தூக்கிலிடும் பத்திரம்; இவ்வுலக பந்தங்களிலிருந்து விடுதலைசெய்யும் கட்டளை கொண்டுவந்துவிட்டாயா?’ என்றான். ‘ஆமாம், இதோ’ என்றுதன் மடியிலிருந்த ஒரு பத்திரத்தை நீட்டினார் யதுநாதன். ஒரு கான்ஸ்டேபிள் விளக்கைப் பெரிது செய்தான். ஸப் இன்ஸ்பெக்டர் டார்ச் லைட்டையும் அடித்தார். பார்த்தஸாரதிக்குக் கொலைக்கேஸில் யாதொரு ஸம்பந்தமுமில்லை என்றும், உடனே அவன் விடுதலை செய்யப்பட்டானென்றும் பத்திரத்தில் கட்டளை எழுதப்பெற்றிருந்தது. பார்த்தஸாரதி மூர்ச்சையானான்.

(தொடரும்)

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ।

# ஸௌஜந்ய பரிமளம்

[ஸ்ரீ. உப. வித்வான் திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L, திருப்பதி.]

𑌯𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌬𑌹𑍁 ।
𑌯𑌾𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌤𑌿 𑌹𑍃𑌤𑌾𑌤𑌿 𑌹𑍃𑌦𑌿 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑌣𑌃 ॥
𑌤𑌾𑌵𑌤𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑌃 𑌸𑍍𑌵𑌾𑌸𑍍𑌥𑍍𑌯𑌤𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌯 𑌸𑍇𑌵𑌨𑌾𑌦𑌿𑌕𑌮𑍍 ।
𑌸𑍁𑌖𑌂 𑌜𑌗𑌤𑌿 𑌯𑌦𑌾𑌹𑍁𑌃 𑌸𑍌𑌜𑌨𑍍𑌯𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌪𑌦𑌃 ॥

பாரினில் தோன்றி நின்ற பொருளேதுவேனுமென்றன்
சீரிது வாகு மென்று சாலவுங்களித்தி டென்ப
வாரித மனைய மேனி வானவா வம்பனென்றோர்
பேரிடா வண்ண மென்னைப் பேணிநீ களித்திடாயே.

யாதானு மொருவகையி லெங்கள் தூப்புல் இறைவனவன் இன் குணத்தின் இனிய சொல்
மீதான வண்மையையாம் வதத்துப் பேசி மாசற்ற மதியுடையோர் தங்கு ழாத்தைக் [லின்
காதாரக் கேட்பிக்கத் தருணமீயுங் குணமுடையோர் யாவரவர் பொன்னே போன்ற
பாதார விந்தமது யாம் வணங்கும் பரம்பொருளென் றெம்மனமே நாடு நீயே.

## 1. ஸ்ரீமாந்வேங்கட

ஸ்ரீமாந் 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌕𑍇𑌸𑌰𑍀 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑍋 𑌮𑍇 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌹𑍃𑌦𑌿 ॥

ஸ்ரீமாந்– ஜாயமாந கடாக்ஷம் பெற்றவர்; கருவிலே திருவுடையார்.

வேங்கட நாத–திருவேங்கடமுடையான் திருவருளாலே அவதரித்தவராகையாலே அவர் திருநாமமே இடப்பெற்றவர். அவரே இவர் என்னும் பெருமை வாய்ந்தவர்.

ஆர்ய:– உரியகாலத்தில் சௌளோபநய வித்யாரம்பாதி ஸர்வ ஸம்ஸ்காரங்களும் செய்யப்பெற்று 'விம்சத்யப்தே' என்றபடி ஸகல வித்யா பாரங்கதராயிருந்தவர்.

இப்படி முதல் பாதத்தால் அவதாரச் சிறப்பும் அவதார கார்யத்திற்கு வேண்டிய யோக்யதா ஸம்பத்தியும் சொல்லிற்று. இனி அவதாரகார்யமிரண்டில் ஒன்றான பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்தைக் காட்டுகின்றது இரண்டாம் பாதம்–

கவிதார்க்கிககேஸரீ– கவிகளுக்கும் தர்க்கம் கற்றவர்களுக்கும் ஸிம்ஹம். இது ரூபகாலங்காரத்தின் ஏகதேசவிவர்த்தி என்னும் ஒரு வகை. இவரை ஸிம்ஹம் என்றதால் கவிகளும் தார்க்கிகர்களும் யானைகள் என்றதாகின்றது. அவர்களை வெல்லுமவர் என்று கருத்து. பகவத்ராமாநுஜ ஸித்தாந்தத்தை க்ரந்த மூலமாக ஆக்ஷேபித்தவர்களுக்கு க்ரந்தமுகமாகவும், நேரில் வாதம் செய்தோர்க்கு நேரில் வாதத்தாலும் ஸமாதாநம் கூறி அவர்களை நிரஸநம் செய்யுமவர் என்று பரம தாத்பர்யம். 'ந வயம் 𑌕𑌵𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑍇𑌵𑌲𑌂' என்ற ஆளவந்தார் ச்லோகத்தின் கருத்து நோக்கி இவ்விருது அளிக்கப்பட்டது.

ப்ரதாநமான மற்றொரு அவதார கார்யத்தைக் காட்டுகின்றது மூன்றும் பாதத்தின் முதல் பதம். வேதாந்தாசார்யவர்ய:– க்ரந்தங்கள் ஸாதித்தும் உபதேசம் பண்ணியும் வேதாந்த ப்ரசாரம் செய்யுமவர். வேதாந்த வித்யா ப்ரவசநம் செய்யுமவரெல்லோரும் வேதாந்தாசார்யரெனப்படுவதற்கு அர்ஹர்கள். அவர்களுக்குள் ச்ரேஷ்டர். ஸ்ரீரங்கநாதன் தானே இப்பெயரை இட்டு இவரை இவ்வாசார்ய ஸ்தாநத்தில் வைத்தானாதலின் அச்சிறப்

புத்தோன்ற 'வர்ய:' என்றது. இன்னும் அநுஷ்டானம் ஆத்மகுணம் இவற்றின் ஏற்றத்தையும் ஸம்ஸ்க்ருத ப்ராக்ருத த்ராவிட பாஷைகளில் பல க்ரந்த நிர்மாணத்தால் செய்த உபகாரத்தையும் கருதி 'வர்ய:' என்றதென்னவுமாம்.

இனி, இப்படி அவதரித்துச் செய்தருளிய கார்யங்களின் பரமோத்தேச்யம் நம்மிடத்தில் பலிக்குமாறு அவரது அநுக்ரஹத்தை ப்ரார்த்திக்கிறது ச்லோக சேஷம்.

மே-என்னுடைய. 'அவஜாநந்தி' என்று ஸ்ரீ க்ருஷ்ணனே தன்விஷயத்தில் லோகமிருக்குமிருப்பைப் பேசினர். அப்படியிருக்க ஸ்ரீ தேசிகன் விஷயத்தில் ஸர்வஸம்ப்ரதிபத்தியை எதிர்பார்ப்பது உசிதமன்று. என்னைப்பற்றி நான் பேசுவதில் எனக்கு அதிகாரமுண்டு என்றபடி.

ஹ்ருதி—ஹ்ருதயத்தில். ஹ்ருதயத்தில் அவர் இருந்தால் வாக்கும் காயமும் வேறுவிஷயத்தில் செல்லாது.

ஸதா – எப்போதும். கால தத்வமுள்ளவரையில். இங்குமாத்ர மன்று; அங்கும்.

ஸந்நிதத்தாம் – எழுந்தருளியிருக்க வேண்டும். இவர் எழுந்தருளினுல் அவன் தானே எழுந்தருளுகிருன். ஆத்மநேபதம் எழுந்தருளியிருப்பதனால் உண்டாகும் பலன் அவருடையதே. எழுந்தருளாவிட்டால் அவர் அவதாரோத்தேசம் ஸித்திக்காது' என்கிறது.

இந்த நான்கு பாதங்களிலும் வ்யங்க்யமாக ஜகத்காரணத்வமும், அபாத்யத்வமும், உபாயத்வமும், பலமும் ஆக சாரீரகத்தில் நான்கு அத்யாயங்களில் ப்ரதிபாதித்த நான்கு ப்ரதாநார்த்தங்களும் தோற்றும்.

## 2. கவிதார்க்கிகஸிம்ஹ

𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌾𑌯 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌶𑌾𑌲𑌿𑌨𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃 ॥

முன் தனியனில் வ்யங்க்யமாயிருந்த ஓர் அம்சத்தை ஸ்பஷ்டமாக்குகின்றது இத்தனியன். 'கவிதார்க்கிகசேஸரீ வேதாந்தாசார்யவர்ய:' என்று நடுவில் வேறொரு பதமில்லாமல் சொன்னதிலிருந்து பரமதநிரஸநம் அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந பரமபுருஷப்ரதத்வ ப்ரதிபாதக வேதாந்த ஸித்தாந்த ஸ்தாபநத்திற்காகவே யாதலின் அது செய்யும்போதும் பிறரிடத்தில் த்வேஷம், அஸூயை, கோபம் முதலியனவும், தன்னிடத்தில் கர்வம் விகத்தநம் முதலியனவும் இராமல் சமதமாதி குணங்களே தலையெடுத்து நிற்குமென்பது வ்யங்க்யமாயிருந்தது. அது இங்கு 'கல்யாண குணசாலிநே' என்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டது. அதனால் இங்கு ஸ்வாமிவாசக பதங்கள் ஐந்தாயின. ஸத்யத்வ, ஜ்ஞாநத்வ அநந்தத்வ, ஆநந்தத்வ, அமலத்வங்கள் ஐந்தும் பரப்ரஹ்மத்திற்கு ஸ்வரூபநிரூபகங்கள். அவ்வாறு கவிதார்க்கிகஸிம்ஹத்வ, கல்யாணகுண சாலித்வ, ஸ்ரீமத்வ, வேங்கடநாதத்வ, வேதாந்தாசார்யத்வங்கள் ஸ்ரீதேசிகனுக்கு.

நமஸ் என்று நம்முடைய வ்யாபாரம் விதேயமாய் ப்ரதாநமாயிற்று. உபாயமும் பலமுமாகும் இந்த நமஸ்காரம். '𑌹𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌤𑍇 𑌨𑌮 𑌉𑌕𑍍𑌤𑌿𑌂', '𑌨𑌮𑍋 𑌹𑌰𑌤𑍇 𑌵𑌸𑍂𑌭𑌿', '𑌨𑌮 𑌆 𑌦𑍇𑌵𑍍𑌯 𑌵𑌾𑌚𑌿𑌨𑌃' என்றது போல.

'𑌸𑌂𑌨𑌿𑌯𑌤𑍍𑌤𑌾𑌂' என்று ஆவாஹநம் பண்ணி 𑌇𑌹 𑌨𑌮𑌃 என்று உபலக்ஷணமாய் ஸர்வோபசாரங்களும் செய்யப்படுகின்றன.

இந்த இரண்டு தனியன்களிலும் தார்க்கிகபதம் வாது செய்வோர் யாவரையும் குறித்து நிற்கிறது. தர்க்க சாஸ்த்ரம் கற்றவர்களை மாத்திரமன்று. அதனால் ஸாங்க்யம், யோகம், மீமாம்ஸை, ஜைநம், பௌத்தம் முதலிய தர்சநங்களிலும், மற்றுமுள்ள சாஸ்த்ரங்களிலும் எதைக்கொண்டு வாது செய்தாலும் நிரஸித்து விசிஷ்டாத்வைதஸித்தாந்த ஸ்தாபநம் செய்யத்தக்க வன்மை வாய்ந்தவர் என்பதும் அதன்மூலம் ஸ்ரீரங்கநாயகி ப்ரஸாதித்தருளின ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரத்வமும் தோற்றும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸத்யம் வத

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாநவித்வான், தேசிகதர்சநவிஜயத்வஜ, புத்தங்கோட்டகம்,
ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி.]

[ப்ராணிகளுக்கு அஹிதத்தைக் கொடுக்காததாய், கெட்ட எண்ணத்தினல் சொல்லப்படாததாய், தானறிந்தபடியே சொல்லப்பட்ட வார்த்தை ஸத்யமென்று கீழே சொல்லப்பட்டது.]

இதற்குமேல் ப்ரத்யக்ஷமாக அறியப்பட்ட விஷயத்தை அறிந்ததற்கு விபரீதமாகச் சொல்லப்பட்ட வார்த்தைகூட ஸத்யமென்று மஹாபாரதத்தில் சொல்லப்படுகிறபடியினல் இது ஸத்யலக்ஷணமாகுமா? என்று சங்கையுண்டாகிறது. அதையும் இங்கு தெரிவித்து அதற்கு ஸமாதானத்தையும் தெரிவிக்கிறேம்.

மஹாபாரதம் ஆஸ்வமேதிகபர்வம் அத்யாயம் 4முதல் 10வரையில் மருத்தன் என்கிற அரசனுடைய சரித்ரம் சொல்லப்படுகிறது. அதை இங்கு ஸங்க்ரஹமாக குறிப்பிடவேண்டியதாக இருக்கிறது.

இவ்வுலகத்தில் மருத்தனென்கிற ஓர் அரசன் எல்லாபூமிக்கும் ராஜாவாக இருந்ததோடு நல்ல குணங்களில் அவனுக்கு ஸமானமாக மற்றெருரு அரசனில்லை என்று எல்லோரும் கொண்டாடும்படி இருந்தான். அவ்வரசனது பெருமையைக்கண்டு ஸஹிக்காமல் அவனிடம் அஸூயையயடைந்த தேவேந்த்ரன் அவனை அவமானப்படுத்துவதற்காக அவனுக்கும் தனக்கும் ஏற்கனவே புரோஹிதராயிருந்த ப்ருஹஸ்பதியைக் கூப்பிட்டு மூன்று லோகங்களுக்கும் மஹாராஜாவாக இருக்கிற எனக்கு புரோஹிதராயுள்ள நீர் பூலோகத்திற்குமட்டும் அரசனன மருத்தராஜனுக்கு புரோஹிதராக இருக்கக்கூடாது. இனி நீர் மருத்தராஜனுக்கு புரோஹிதராக இருந்தால் நான் உம்மை புரோஹிதராக வைத்துக் கொள்ளமாட்டேன் என்று சொன்னன்.

அதைக்கேட்ட ப்ரஹஸ்பதி மருத்தராஜனுக்கு புரோஹிதராக இருக்கமாட்டேன் என்று சொல்விவிட்டார். அதைக்கேட்டு மருத்தராஜன் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில் யத்ருச்சையாக அவ்வரசனைக் கண்ட நாரதர் மருத்தராஜனைப்பார்த்து ‘நீ இதற்காக வருந்தவேண்டாம்; ப்ரஹஸ்பதிக்குத் தம்பியாய் ப்ரஹஸ்பதியைக்காட்டிலும் அதிகமான மஹிமையை உடையவரும், ப்ரஹஸ்பதியானவர் அவருடைய ஸகல ஸொத்துக்களையும் அதர்மமாக அபஹரித்துக்கொண்டுவிட்டபடியால் தமயனன ப்ருஹஸ்பதியினிடத்தில் த்வேஷமுள்ளவருமான ஸம்வர்தர் என்கிற ப்ராஹ்மணர் ஒருவரிருக்கிறர். நீ அவரிடம் போய் அவரை ஶரணமடைந்து ப்ரார்த்தித்தால் அவர் உனக்கு புரோஹிதராக இருந்து உனக்குவேண்டிய ஸர்வகார்யங்களையும் நடத்திவைப்பார் என்று சொன்னதோடு ‘பித்தர் என்றே பிறர்கூற’ என்னும்படியிருக்கிற அவரை இவர்தான் என்று கண்டறிவதற்கும் அவர் மருத்தனுடைய வார்த்தையை அங்கீகரிப்பதற்கும் அனுகூலமான மார்க்கங்களையும் உபதேசித்து, அவர் ‘நானிருக்குமிடம் உனக்கு யார் சொன்னர்’ என்றுகேட்டால் ‘நாரதர் சொன்னர்’ என்று சொல்லு. நாரதரிப்போது எங்கேயிருக்கிறர் என்றுகேட்டால்,

‘ஸவேஷு ஜந்துஷ்வந்தர்ஹித
ஜாந்தர்க்ஷேத்ரஜ்ஞயா ।
ஸம்வேஶ்யா வஹ்நிஜாலேஷு
ஜாதவேதஸ்ஸதேஜஸா ॥’

என்கிறபடியே நாரதர் நெருப்பில்விழுந்து இறந்துபோய்விட்டார் என்று சங்கிக்காமல் சொல்லு என்று நாரதர் மருத்தராஜனிடம் சொன்னதாகவும் அவ்வரசன் அந்த

ஸம்வர்த்தரிடத்தில் போய் அப்படியே சொன்னதாகவும் 1–6–7– அத்யாயங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு நாரதர் உயிரோடு ஜீவித்திருக்கும்போது அவர் இறந்துபோனதாகச் சொன்னது எப்படி ஸத்யவார்த்தையாகலாம் என்று சங்கையுண்டாகலாம்.

ஆனால் ஸம்வர்த்தரிடத்தில் மருத்தராஜன் ஜீவித்திருக்கிற நாரதரைக்குறித்து இறந்துபோய்விட்டதாகச் சொன்னதனால் அது ஸத்யமல்ல பொய் வார்த்தைதான் என்று சொல்லிவிடுவோம் என்று சொல்லக்கூடாது. ஏனென்றால்—ஸம்வர்த்தர் மருத்தனைப்பார்த்து நாரதர் எங்கே என்று கேட்டவுடன்:—

'ஸத்யமேதத் ப்ருவதஸ்ஸர்வே
ஸம்பத்ஸ்யந்தே மனோரதா: |
அந்ருதே ப்ருவதோ மூர்த்தா
ஶததா ஸம்பலிஷ்யதி ||'

[நீ ஸத்யத்தைச்சொன்னால் உன்னுடைய இஷ்டங்கள் ஸித்திக்கும்; நீ பொய்யைச்சொன்னால் உன்னுடைய தலை நூறு பாகமாக வெடித்துப் போய்விடும்] என்று சொன்னார்.

நாரதர் நெருப்பில்விழுந்து இறந்துபோனார் என்று மருத்தன் சொன்ன வார்த்தை பொய்வார்த்தையாக இருக்குமானால் மருத்தன் தலை நூறுபாகமாக வெடித்துப்போய் மருத்தன் இறந்துபோயிருக்க வேணும். அப்படிப் போகாததனால் அந்த வார்த்தை ஸத்யமானதுதான் எனத் தோன்றுகிறது. ஆனாலும், நாரதர் நெருப்பில்விழுந்து இறந்து போனதாக நீ ஶங்கிக்காமல் சொல்லு என்று நாரதர்சொன்ன வார்த்தையை மருத்தன் தான் நாரதரிடம் கேட்டபடியே ஸம்வர்த்தரிடம் சொன்னபடியினால் அந்தவார்த்தை ஸத்யந்தான் என்று சொல்லக்கூடாதா? என்று ஸந்தேஹம் சிலருக்கு உண்டாகலாம். அது ஸரியல்ல. ப்ரத்யக்ஷமாக நாரதர் ஜீவித்திருப்பதைப் பார்த்திருக்கும் மருத்தன் ப்ரத்யக்ஷத்திற்கு விருத்தமாக நாரதர் சொன்னதைக் கேட்டபடி சொன்னாலும் அது ப்ரத்யக்ஷத்திற்கு விருத்தமாக நெருப்பு சுடாது என்று சொல்லுகிற வார்த்தைபோல ஸத்யமாகாது. அப்படியில்லாவிட்டால் வாதியையோ ப்ரதிவாதியையோ பார்த்து நீ இப்படி பொய்சொன்னால்தான் உன்னுடைய வ்யவஹாரம் ஜயிக்குமென்று இக்காலத்தில் சிலர் சொல்வதும் ஸத்யமாகும். ஆகையினால் நாரதர் தான் ஜீவித்திருக்கையில் தானிறந்து போனதாகச் சொன்னதும் அதை மருத்தன் அநுவாதம் பண்ணினதும் ப்ரபலப்ரமாணமான ப்ரத்யக்ஷத்திற்கு விருத்தமாகையினால் துர்பலப்ரமாணமான ஶப்தப்ரமாணம் அவ்விஷயத்தில் ப்ரவர்த்திக்காது. ஆகையினால் நாரதர் வார்த்தையும் அதன் அநுவாதமான மருத்தன் வார்த்தையும் ஸத்யமல்லவென்று சொல்லவேண்டியதே உசிதமாக இருக்க, 'நீ பொய் சொன்னால் உன் தலை வெடித்துப் போகும்' என்று ஸம்வர்த்த ரிஷி சொன்னபடி மருத்தராஜன் தலை வெடிக்காததனால் அந்தவார்த்தையைப் பொய் என்று சொல்ல முடியாமலிருக்கிறதே? என்னில் இதற்கு ஸமாதானம்:—

'பார்ஹஸ்பத்யேனைவ யாஜ்யஸ்ய
ஸர்வா: க்ருஹ்யாஸ்ச தேவதா: |
வாஸவேந ஸமாக்ஷிப்தம்
ஶரீரம் வர்ஜிதம் த்விதம் ||'

[என்னுடைய தமயனான ப்ருஹஸ்பதியினால் என்னுடைய க்ருஹஸ்த்தாஶ்ரமமும் (பத்நியுமென்றபடி) சிஷ்யவர்க்கமும் பூஜிக்கக்கூடிய பகவத்விக்ரஹங்களும், 'வ' என்பதினால் மற்றும் ஸர்வஸொத்துக்களும் பிடுங்கிக்கொடுக்கப் பட்டன. இந்த தேஹம்தான் அவரால் எடுத்துக்கொள்ளப்படவில்லை] என்கிற ஸம்வர்த்தருடைய வாக்யத்தின்படியே ஸகல ஸொத்துக்களையுமிழந்து 'சசாரோந்மத்தவத்' என்கிறபடியே பைத்யத்தைப்போல வைராக்யாதிசயத்தினாலே ஸர்வஸங்கநிவ்ருத்தராய் இருந்த ஸம்வர்த்தரை மருத்தராஜனுக்கு பௌரோஹித்யம் பண்ணும்படி மருத்தனுக்குக் காட்டிக்கொடுத்து அவரை ப்ரவ்ருத்திமார்க்க நிஷ்டராம்படி நாரதர் செய்தபடியினாலே அவருக்குக் கோபமுண்டாகி நாரதர் நாசமடையும்படி சபித்துவிட்டால் என்செய்வமெனப் பயந்து நாரதர் நெருப்பில் விழுந்து இறந்த

தாகச் சொல்லு' என்று நாரதர் சொன்னார். ஆகையினால் இந்தவார்த்தை ப்ராணன் போய் விடுமே என்று பயந்து சொன்னதாகையாலே இது பொய்யாகாது; ஸத்யமேயாகும். ஆகையினால்தான் மருத்தன் தலை வெடித்துப்போக வில்லை. இது, ஹநுமானை ஹிம்ஸித்துவிடுவார்களோ என்று பயந்து ஸீதை ஹநுமானைக் குறித்து 'இவனை எனக்குத் தெரியாது' ('நைநம் ஜாநாமி கோऽயம்') என்று சொன்னதற்குத் துல்யம். ஆகையினால் ஒரு விரோதமுமில்லை. ப்ராணன் போகக்கூடியதாகவிருந்தால் அது போகாமலிருப்பதற்காக பொய்யை அவஶ்யம் சொல்லவேண்டுமென்று மநுஸ்ம்ருதி 8-ம் அத்யாயத்திலும், யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதியிலும்,

'ஶூத்ரவிட்க்ஷத்ரவிப்ராணாம்
யத்ரர்தோக்தௌ பவேத்வத: ।
தத்ர வக்தவ்யமந்ருதம்
தத்தி ஸத்யாத்விஶிஷ்யதே ॥'

[நான்கு ஜாதிமனிதர்களுக்குள் ஒருவனுக்கு ஸத்யம் சொல்வதினால் நாஶம் ஸம்பவிக்குமானால் அந்த ஸமயத்தில் பொய்யைச் சொல்ல வேண்டும். அந்த பொய்யானது ஸத்யம் சொல்வதைக்காட்டிலும் உயர்ந்த புண்யமாகும்] என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதை ஸ்ரீராமனுடைய அநுஷ்டாநத்தினாலும் தீர்மானிக்கலாம். ராமாயணம் அயோத்யாகாண்டத்தில்,

'நாஶ்ரௌஷமிதி ராஜாநம்
உபாலப்தோऽபி வக்ஷ்யஸி ।
சிரம் து:கஸ்ய பாபிஷ்டம்
இதி ராமஸ்தமப்ரவீத் ॥'

ப்ராணாத்யயவிஷயத்தில் —

ஸ்ரீராமன் காட்டுக்கெழுந்தருளும்போது ராம விரஹத்தை ஸஹிக்காத தசரதன் தேரோட்டுகிற ஸுமந்த்ரனைக் கூப்பிட்டு ராமனைப் பார்க்கவேணுமென்கிற ஆசையினால் தேரை நிருத்தச்சொன்னான். காட்டுக்குப் போகிற ஸமயத்தில் தன்னை தசரதன் பார்த்தால் அதிக துக்கமுண்டாகி, அதனால் தசரதன் இப்போதே இறந்துபோய்விடுவன் என்று நினைத்து, ராமன் ஸுமந்த்ரனைப்பார்த்து 'தேரை நிருத்தாதே' என்று சொன்னான். தசரதன் சொன்னபடி தேரை நிருத்தாமல் ராமன்சொன்னபடி தேரை காட்டுக்கு ஓட்டிக்கொண்டு போனால், பிறகு அயோத்திக்கு திரும்பிவந்த என்னைப்பார்த்து 'நான் என்னுடைய ப்ரியனான புத்ரனைப்பார்க்கவேண்டுமென்று தேரை நிருத்தும்படி உனக்குச் சொன்னேன்; நீ என் வார்த்தையை அநாதரித்து தேரை நிறுத்தாமல் ஏன் காட்டுக்கு ஓட்டிக்கொண்டுபோனாய்?' என்று தசரதன் கேட்டால் நான் அவருக்கு என்ன பதில் சொல்வது?' என்று ஸுமந்த்ரருக்கு அபிப்ராயமிருக்கலாம் என நினைத்து ராமன் ஸுமந்த்ரனைப்பார்த்து:—

'நாஶ்ரௌஷமிதி ராஜாநமுபாலப்தோऽபி வக்ஷ்யஸி' [திரும்பி அயோத்யைக்குப் போன உன்னைப்பார்த்து தசரதராஜன் நீ ஏன் என்னுடைய வார்த்தையைக் கேட்கவில்லை?' என்று கோபித்துக்கொண்டால் 'தேரை நிறுத்து என்று நீர் சொன்ன வார்த்தை என்னுடைய காதில் கேட்கவில்லை' என்று பதில் சொல்லிவிடு] என்று சொன்னான். இந்த ராமவார்த்தையைக் கேட்ட ஸுமந்த்ரன் 'தசரதராஜன் தேரை நிறுத்து என்று சொன்ன வார்த்தை என் காதில் வ்யக்தமாகக் கேட்டிருக்கிறதே; அதை நான் எப்படி கேட்கவில்லை என்று பொய் சொல்லுகிறது? நீதான் என்னைப் பொய் சொல்லும்படி ஏன் சொல்லுகிறாய்' என்று கேட்க, ராமன் 'சிரம் து:கஸ்ய பாபிஷ்டம்' என்று பதில் சொன்னான். அதாவது- து:கஸ்ய சிரம் பாபிஷ்டம் (தசரதனுக்கு) அதிககாலம் துக்கமுண்டானால் அது மஹாபாபமாக முடியும். நீ தேரை நிறுத்தினால் தசரதராஜன் வந்து என்னை ஆசையினால் நெடுங்காலம் பார்த்து வருத்தப்பட்டு துக்கம் தாங்காமல் இறந்துபோய்விடுவான் என்று ராமனுடைய அபிப்பிராயம்.

தசரதனுடைய ப்ராணன் போகாமலிருப்பதற்காக தேரை நிறுத்தாமல் ஓட்டிப்போய் விடும் பிறகு தசரதன் உம்மைக் கேட்

டால் நீர் தேரை நிறுத்தச்சொன்னது என் காதில் படவில்லை என்று பொய் சொல்வது பாபமாகாது என்று அபிப்ராயம்.

இங்கு 'லக்ஷணஹேத்வோ: க்ரியாயா:' என்கிற வ்யாகரண ஸூத்ரத்தினால் வந்த ஶத்ரு என்கிற ப்ரத்யயம் தசரதனுடைய மரணம் ஸம்பவித்தால் அது மஹாபாபமென்று சொல்வதால் அந்த மஹாபாபம் வாராதிருப்பதற்காக நீர் பொய் சொல்லுகிற சின்னபாபம் குற்றமல்ல என்கிற அர்த்தம் ஸூசிக்கப்படுகிறது.

இங்கு வால்மீகி மஹர்ஷி ராமன் இப்படிச் சொன்னான் என்று ஆச்சர்யப்படுகிறார்.

ஆகவே இதுவும் ப்ராணன் போகக்கூடிய ஸந்தர்ப்பத்தில் பொய் சொல்வது குற்றமல்லவென்பதற்கு உதாஹரணமாகிறது.

இதைப்போலவே ஹநுமானைக் குறித்து ராக்ஷஸிகள் ஸீதையைப் பார்த்து உனக்கு இந்தக் குரங்கைத் தெரியுமா? என்று கேட்டதற்கு ஸீதை—'நைநம் ஜாநாமி கோ(அ)யம்' என்று ஹநுமானுக்கு ப்ராணபயம் வந்துவிடுமோ என்று நினைத்து இவனை எனக்குத் தெரியாதென்று சொன்னாள். இதைப்போலவே மற்றும் சில விஷயங்களில் பொய் சொல்வது பாபமாகாது என்கிற விஷயத்தை—

'விவாஹகாலே ரதிஸம்ப்ரயோகே
ப்ராணாத்யயே ஸர்வதனாபஹாரே ।
விப்ரஸ்ய சார்தே ஹ்யந்ருதம் வதேயு:
பஞ்சாந்ருதான்யாஹுரபாதகானி ॥'

என்று ஶாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன.

[கல்யாணம் நின்றுபோகாமல் நடக்கிற விஷயத்திலும், ஸ்த்ரீயோடு சேருகிற காலத்திலும், ப்ராணன் நசிக்கும்காலத்திலும், ஸர்வ ஸொத்துக்களையும் பிறர்கள் அபஹரிக்காமலிருப்பதற்காகவும், ப்ராஹ்மணனுக்காகவும் பொய்யைச் சொல்வார்கள். இந்த ஐந்து விஷயத்தில் பொய் பேசுவது பாபமாகாது.]

விவாஹ விஷயத்தில் பொய் சொல்வது பாபமல்லவென்பதை பாரதம் ஆநுஶாஸந பர்வத்தில் தர்மபுத்ரன் பீஷ்மரைக்குறித்து,

'கந்யாயாம் ப்ராப்தஶுல்காயாம்
ஶ்ரேயாம்ஶ்சேதாவஹேத் வர: ।
தர்மகாமார்தஸம்பந்ந:
வாச்யமந்ருதம் நவா ॥'

[ஒரு கந்நிகையை ஒரு வரனுக்குக் கொடுப்பதாகப் பேசி நிச்சயித்து கன்யாசுல்சத்தையும்வாங்கினபிறகு தர்மம் அர்த்தம் காமம் இவைகளினால் உயர்ந்த மற்றொருவரன் அந்த கந்நிகையைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதாக வந்து கேட்டால் அந்தஸமயத்தில் பொய் சொல்லலாமா கூடாதா?] என்று கேட்டான்

அதற்கு பீஷ்மர்:—

'தாஸ்யாமீதி ஸுதே கந்யாம்
உக்திர்பூர்வம் ந ஸாக்ஷிதம் ।
யே வாஹுரஸ்வதனாதஹ:
தஸ்மாத்வாசஸ்யம் வசஸாந்ருதம் ॥'

[முன்பு ஒரு வரனைக்குறித்து என் கந்நிகையை உனக்குத் தருகிறேன் என்று சொல்லியிருந்தாலும் பிறகு வேறு உயர்ந்த வரன் கிடைத்தால் அவர்கள் அப்படிச் சொன்னவர்களாக ஆகமாட்டார்கள். அதாவது முன்பு கந்நிகையைக் கொடுக்கிறேன் என்று சொல்லியிருந்த வார்த்தை பொய்யாகும்படி பிறகு கொடுக்கமாட்டேன் என்று சொன்னாலும் அது பொய்யாக ஆகாது என்றர்த்தம்.]

'தஸ்மாத் க்ரஹணாத்ஶுல்காணாம்
யாசயந்தி வரஸ்ய'இ ।'

[ஆகையினால் கந்நிகையை வரன் தானம் வாங்குகிறவரையில் அந்த கந்நிகையை மற்றொருவன் யாசிப்பது ப்ரஸித்தமாக இருந்துவருகிறது என்று பதில் சொன்னார்.]

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸம்பாதகரின் குறிப்புகள்

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

நாளது ஆடிமீ 2வ புதன்கிழமையன்று திருவெவ்வுளூரில் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய, பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய, ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய, ஸ்ரீ பகவத்ராமாநுஜஸித்தாந்தநிர்த்தாரணஸார்வபௌம, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப

## ஸ்ரீ அழகியசிங்கர்களின் ஸங்கல்பமஹோத்ஸவம்

மஹோத்ஸவமும், அந்த ஸ்ரீ அழகியசிங்கரால் ஸ்ரீ அஹோபிலமடத்தின் திவ்யாஸ்தாநத்தில் 43-வது பட்டத்திற்காக நியமிக்கப்பட்ட ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ரமஹாதேசிகனுடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவமும் வெகு விமரிசையாக நடந்தேறிய விஷயம் வாசகமஹாசயர்களுக்கு ஸமாசாரப்பத்ரிகைகள் மூலமாகவும் வேறு விதமாகவும் தெரிந்திருக்கலாம். மழையின்மையாலேற்பட்ட ஜலக்கஷ்டம் பெரிதாயிருந்தும் இரண்டு ஸ்ரீ அழகியசிங்கர்கள் கண்டருளும் வைபவத்தை அநுபவித்து ஆநந்திக்க ஆஸ்திகர்கள் திரளாகக் கூடியிருந்ததைக்கண்டு அனைவரும் பெருமகிழ்ச்சி யெய்தினர்.

ஸர்வபூதங்களுக்கும் அபயம் கொடுப்பதாய் ப்ரதிஜ்ஞைபண்ணி துரீயாச்ரமஸ்வீகாரம் செய்துகொண்டவர்கள் ஸந்யாஸிகள். அந்த ப்ரதிஜ்ஞைக்கநுகுணமாக அவர்கள் வர்ஷருதுவில் செய்யவேண்டிய கார்யமொன்றுண்டு. வர்ஷாகாலத்தில் மழைபெய்து ஜீவராசிகள் அதிகமாகத் தோன்றி எங்குபார்த்தாலும் ஜீவமயமாயிருக்குமாதலால் அவைகளின் வளர்ச்சிக்குத் தங்களுடைய ஸஞ்சாரத்தால் எவ்விதக்கெடுதலும் நேராமலிருப்பதற்காக ஸந்யாஸிகள் தங்கள் ஸஞ்சாரத்தை நிறுத்திக்கொண்டு ஆஷாடமாஸம் பௌர்ணமி முதல் நான்குமாதகாலம் ஒரே இடத்தில் தங்கி வஸிப்பதாக ஸங்கல்பித்துக்கொண்டு அப்படிவஸித்துவரவேண்டுமென்றும். அந்தக்காலத்தில் தங்களுடைய நித்யகர்மாநுஷ்டாநத்திற்கு அபேக்ஷிதமான ம்ருத் (மண்) முதலியதை முன்னதாகவே ஸங்க்ரஹித்து வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் தர்மசாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

[‘தயார்த்தம் ஸர்வபூதாநாம்
வர்ஷாஸ்வேகத்ர ஸம்வஸேத்’ (மநு)

‘ஜலே ஜீவா: ஸ்தலே ஜீவா:
ஆகாஶே ஜீவமாலிகா ।
ஜீவமாலாகுலே லோகே
வர்ஷாஸ்வேகத்ர ஸம்வஸேத் ॥’
(யமஸ்ம்ருதி)

‘ஆஸதி ப்ரதிபந்நஸ்து
மாஸாம்ஶ்ச வார்ஷிகாந் நிஹ ।
நிவஸ்த்ராதீதி ஸஜ்ஜஸ்வ
ஏநஸா பாஞ்சிலசிவர்த்மகஸ்து ॥
ப்ராயேண ப்ராவ்ருஷி ப்ராணி
ஸங்குலம் வர்த்ம த்ருஶ்யதே ।
ஆஷாட்யாதி சதுர்மாஸம்
கார்த்திக்யந்தம் து ஸம்வஸேத் ॥’ [அத்ரி]

இத்யாதி வசநங்கள் பலவுள.] இப்படி ஒரு இடத்தில் தங்கி வஸிப்பதாகச் செய்துகொள்ளும் ஸங்கல்பமே சாதுர்மாஸ்யஸங்கல்பமென்று சொல்லப்படுகிறது. வர்ஷாகாலத்தில் மழை பெய்யும்; அப்போது பல ஜீவராசிகள்

தோன்றும்; அவைகளுக்கு ஸந்யாஸிகள் யாதொரு கெடுதலையும் செய்யக்கூடாது' என்ற நோக்கத்துடன் ஸ்ம்ருதிகளில் சாதுர்மாஸ்யவிதி ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், சாதுர்மாஸ்யத்தை விதிக்கும் வாக்யங்களில் மழைபெய்தால்தான் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் செய்துகொண்டு ஒரு இடத்தில் தங்கவேண்டும்; பெய்யாவிட்டால் தங்காமல் 'க்ராமைகராத்ரமாக ஸஞ்சரிக்கலாம்' என்று சொல்லப்படவில்லையாகையால் அந்த விதி வசநபலத்தால் வர்ஷாகாலத்தில் மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும் யதிகள் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் செய்துகொண்டு ஒரு இடத்தில் தங்கி வஸிக்கவேண்டுமென்று நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. இப்படியே எல்லா ஸந்யாஸிகளும் அநுஷ்டித்து வருகின்றனர். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு ஆங்காங்கு யாத்ரையாக எழுந்தருளி பக்தர்களையும் சிஷ்யகோடிகளையும் அநுக்ரஹித்துவரும் ஸ்ரீ அழகியசிங்கர் சாதுர்மாஸ்யத்தின்போது ஒரு இடத்தில் தங்கவேண்டி நேரும்போது ஸ்ரீ ஸந்நிதியின் சிஷ்யகோடிகளுக்கு ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் நெருங்கி அநுவர்த்தித்து க்ரந்த காலக்ஷேபாதிகளைப் பண்ணி நல்லுபதேசங்களைப் பெறவும் ஆத்மோஜ்ஜீவநகார்யங்களைச் செய்துகொள்ளவும் போதிய அவகாசமும் விசேஷ ஸௌகர்யமும் கிடைக்கும். இக்காரணம்பற்றியே நெடுங்காலமாக ஸ்ரீ ஸந்நிதியில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் விமர்சையாகக் கொண்டாடப்படுவதும் அப்போது சிஷ்யகோடிகள் திரண்டுவந்து ஸ்ரீ அழகியசிங்கரை ஸேவித்து அநுக்ரஹத்தைப் பெறுவதும் வழக்கமாக இருந்துவருகிறது.

சாதுர்மாஸ்யஸங்கல்பத்தில் யதிகள் ம்ருத் ஸங்க்ரஹணம் செய்யும்போது வராஹரூபிய பகவானை த்யானித்துக்கொண்டு மந்த்ரபூர்வமாக ம்ருத்தை ஸங்க்ரஹிக்கவேண்டுமென்றும் அப்படி ஸங்க்ரஹிக்கப்பட்ட ம்ருத்தை முதியோரான யதிகளிடம் ப்ரார்த்தனைபூர்வகமாக ஸமர்ப்பித்து அவர்களிடமிருந்து அதைப் பெற்றுக்கொள்ளவேணுமென்றும் யதிதர்ம ஸமுச்சயத்தில் சாதுர்மாஸ்ய விதியில் கூறப்பட்டிருக்கிறது.

[‘நஸூத்ரேண வ்யாஸேந
வ்ருத்தானாம் ஸந்நிதௌ யதீந்
ஜ்யாயஸே யதயே தத்வா தாம்
யவீயாந் ம்ருத்திகாம் யதி: ॥
விஷ்ணோ: ஸமர்ப்யோ ஹ்யஸ்யா
ஸ்மரணேந வராஹஜாம் ।
க்ருஹாண ம்ருத்திகாம் பிக்ஷோ
ஸம்ஸாரவஹ்ரரம் ஸிவாம் ॥
யோ ஷட்தாதவ்யஸாந்தேந
ஸஸரக்ஷாம் கரோத்யயம் ॥’]

*  *  *  *

இதையநுஸரித்து ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவடிவாரத்தில் வெள்ளி மண்டபத்தில் அர்ச்சாரூபமாக எழுந்தருளியிருக்கும் பூர்வ அழகியசிங்கர்களிடம் ம்ருத்தை ஸமர்ப்பித்துப் பெற்றுக்கொள்வது வழக்கம். இவ்வருடம் நடந்த ஸங்கல்பமஹோத்ஸவத்தில் ஸ்ரீ சின்ன அழகியசிங்கர் முச்சகல்பப்படி ஸ்ரீ பெரிய அழகியசிங்கரிடம் ஸமர்ப்பித்து திரும்பப் பெற்றுக்கொண்டது ஒரு விசேஷம்.

இவ்விதமாக இன்னும் அநேக சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவங்களை இந்த இரண்டு ஸ்ரீ அழகியசிங்கர்களையும் கொண்டு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் இன்னும் ஸம்ஸம்ருத்தமான நிலைமையில் நடத்திக்கொள்ளவேண்டுமென ப்ரார்த்திக்கிறோம்.

*  *  *  *  *  *  *

## ஓர் விண்ணப்பம்.

சென்னை மயிலாப்பூர் அட்வொகேட் ஸ்ரீமான். உப. S. V. வேணுகோபாலாசார்யஸ்வாமி ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் நிர்வாஹகைங்கர்யத்தில் ஸ்ரீ அழகியசிங்கரால் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியை மிக்க மகிழ்ச்சியுடன் வாசகமஹாசயர்களிடம் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா கார்யாலயம் மயிலாப்பூருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் சந்தாதொகைகளைப் பெற்றுக்கொண்டு அதன் வரவுசெலவுகளைப் பார்க்கும் கார்யத்தை அந்த ஸ்வாமி ஏற்றுக்கொண்டி

ருக்கிறார். இனி சந்தாதார்கள் தங்கள் சந்தாத்தொகைகளை அந்த ஸ்வாமிக்கு அனுப்பி வைக்கவேணும். தங்களது விலாஸமாறுதல் முதலியவிபரங்களையும் அந்த ஸ்வாமிக்குத் தெரிவிக்கவேணும். சுருங்கச்சொல்லில், பத்ரிகையின் நிர்வாஹஸம்பந்தமான எல்லாக் கடிதப் போக்குவரத்துகளையும் அந்த ஸ்வாமியுடன் நடத்திக்கொள்ளவேண்டும். பத்ரிகையில் ப்ரசுரிப்பதற்குரிய விஷயங்கள், அது ஸம்பந்தமான கடிதங்கள் இவைகள் மட்டும் ஸம்பாதகரின் விலாஸத்திற்கு அனுப்பப்படவேணும். விலாஸங்களின் விபரம் பின்புறம் அட்டையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது வாசகமஹாசயர்களும் சந்தாதார்களும் இதை நன்ருக கவனித்து அதன்படி நடந்துகொள்ளவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# புஸ்தகங்கள் வரவு

நாலாயிரதிவ்யப்ரபந்தம்—முதலாயிரம்

(பூர்வாசார்யர்களின் உரைப்படிக்குள்ள பாடங்களுடன் திருத்திப் பதிப்பிக்கப் பெற்றது. விலை ரூ 2. கிடைக்குமிடம்- R. கேசவய்யங்கார், ஸீனியர் அட்வொகேட், ஸுப்ரீம் கோர்டு, 56. T. P. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 5.)

ஸ்ரீமான் கேசவய்யங்கார் ஸ்வாமியின் அஸாதாரணமான பாண்டித்யத்தையாவருமறிவர். அவர் ஆராய்ந்து பூர்வாசார்யர்களின் உரைகளுக்கிணங்கியவையெனத் தீர்மானித்துக் கைக்கொண்ட பாடங்களுடன் வெளியிடப்பட்ட இப்புஸ்தகம் அருளிச்செயலை அர்த்தத்துடன் அநுபவிக்க விரும்புவோர் அனைவருக்கும் இன்றியமையாதது. கோஷ்டிகளில் ஸேவிக்கும் அத்யாபகர்களும் இப்புஸ்தகத்தில் கண்டவிதம் பூர்வாசார்யர்கள் கைக்கொண்ட பாடப்படி ஸேவித்து அர்த்தாநுஸந்தானத்துடன் அருளிச்செயல்களின் ரஸத்தை அநுபவிக்க முயலலாம். இப்புஸ்தகத்தின் முதலில் ஸ்ரீமான் கேசவய்யங்கார் ஸ்வாமி எழுதியிருக்கும் 'அருளிச்செயல் மான்மியம்' என்னும் அத்யத்புதமான வ்யாஸத்தை ரஸிகசிகாமணிகள் வாசித்து இன்புறவேண்டியது மிக அவசியம்.

* * * * * * *

வேணுகோபால வரதன்

(தொகுத்தவர் D. ராமஸ்வாமி அய்யங்கார். அட்வொகேட் வேப்பேரி, சென்னை.7. கிடைக்குமிடம் ஷை),

ஆழ்வார்கள், ஆசார்யர்கள், ரிஷிகள், இன்னும் சிறந்த பக்தர்கள் இவர்கள் கண்ணபிரான் வேணுகானம் பண்ணும் அழகை அநுபவித்து அவ்வநுபவபரீவாஹமாகத் தென்மொழியிலும் வடமொழியிலும் இயற்றிய பாசுரங்களையும், ச்லோகங்களையும் ஒருங்கே திரட்டி இப்புஸ்தகத்தில் ஸ்ரீ. உப. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி வெளியிட்டிருக்கிறார். காஞ்சீபுரம் ஸ்ரீதேவாதிராஜன் வேணுகோபாலன் திருக்கோலத்தோடு ஸேவை ஸாதிக்கும் போட்டோ புஸ்தகத்தின் முதலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. பகவதநுபவரஸிகர்களுக்கு இப்புஸ்தகம் மிக உபயோகமுள்ளது.

197525

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு 1951 ஞ ஜுலை.

| சந்தா எண் | பெயரும் விலாஸமும் | வருஷம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 27 | ஸ்ரீ R. L. நாராயணன், கல்கத்தா. | 52 | 3 |
| 32 | ,, P. S. திருமலே ஐயங்கார், விருதுநகர். | 52-53 | 6 |
| 36 | ,, C. A. வெங்கடாசாரி, நுங்கம்பாக்கம். | 48-51 | 12 |
| 82 | ,, N. A. ஸ்ரீநிவாஸஐயங்கார், அனந்தப்பூர். | 51 | 3 |
| 135 | ,, T. மாணிக்கநாயக்கர், சேலம். | 51 | 3 |
| 195 | ,, R. ராமஸ்வாமிஐயங்கார், ஊர்காம். | 51 | 3 |
| 265 | ,, S. ராமஸ்வாமிஐயங்கார், பல்லாவரம். | 51 | 3 |
| 466 | ,, P. ராகவாசார்யர், திருவள்ளூர். | 51 | 3 |
| 699 | ,, P. T. ஸ்ரீனிவாஸாசார்யர், மயிலாப்பூர். | 51 | 3 |
| 1018 | ,, E. M. நரஸிம்ஹாசார்யர், இஞ்சிமேடு. | 51-52pt | 3 |
| 1019 | ,, V. S. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீரங்கம். | 51 | 3 |
| 1020 | ,, C. V. A. க்ருஷ்ணன், சேலம். | 51 | 3 |
| 1021 | ,, P. முத்துஸ்வாமிநாயக்கர், சேலம். | 51 | 3 |
| 1022 | ,, K. காஞ்சீபூர்ணன், சேலம். | 51 | 3 |
| 1038 | ,, K. V. சக்ரவர்த்திஐயங்கார், திருவள்ளூர். | 50-51 | 3½ |
| 1084 | ,, P. N. நரஸிம்ஹாசார்யர், வில்லிவாக்கம். | 51 | 3 |
| 1125 | ,, G. A. கோபாலஸ்வாமி, பூனா. | 51 | 3 |
| 1140 | ,, N. R. S. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், மயிலாப்பூர். | 51 | 3 |
| 1141 | ,, K. பத்மநாபரெட்டியார், டால்மியாபுரம், | 51 | 3 |
| 1142 | ,, K. தாதாசார்யர், ஆரணி. | 51 | 3 |
| | சந்தா எண் தெரியாதது. | | |
| | ஸ்ரீ ரங்கஸ்வாமிஐயங்கார். | — | 3 |
| | ,, R. ராஜகோபால ஐயங்கார். | — | 3 |
| | | மொத்தம் ரூ | 78½ |

## சந்தாதார்களுக்கு ஓர் முக்ய அறிவிப்பு

மணியார்டர் கூபனில் உங்கள் நம்பரை எழுத மறவாதீர்கள்.

நீங்கள் அனுப்பிய சந்தா இம்மாதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் மேலே கண்ட வரவு விவரத்தில் காணப்படாமலிருந்தால் உடனே மானேஜருக்கு அதைப்பற்றி எழுதித் தெரிந்து கொள்ளுங்கள். சந்தா எண் எழுதாமல் பணம் அனுப்பியவர்கள் உடனே தங்கள் நம்பரை ஆபீஸுக்கு எழுதவேண்டுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

*Regd. No. M. 4437*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
379
17 AUG 1951

## முக்கிய அறிவிப்பு

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் கார்யங்களுடைய நிர்வாஹத்தில் நேர்ந்த சில மாறு தல்கள் காரணமாக ஏற்பட்ட விலாஸமாறுதல் கீழே கொடுக்கப்படுகிறது:—

|
V

*மானேஜர்,*
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
45, கல்விவாரு தெரு,
மயிலாப்பூர்-சென்னை-4.

***The Manager,***
Sri Nrisimhapriya,
45, Calvivaru Street,
***Mylapore. Madras-4.***

**இனி சந்தாதார்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேணும். சந்தாதார்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல் களையும் ஷி விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்த மான எல்லா கடிதப்போக்குவரத்துக்களும் மேலேகண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும்.**

* * * * *

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்படவேண்டிய வ்யாஸங்கள், மற்ற விஷயங்கள், ப்ரசுரிக்கப்பட்ட வ்யாஸங்கள் முதலியவை விஷயமான ஆக்ஷேபங்கள், ஸமா தானங்கள், அபிநந்தனங்கள் முதலியவைகள்மட்டும் கீழேகண்ட விலாஸத்திற்கு அனுப்பப் படவேண்டும்.

*ஸம்பாதகர்,*
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
மாலோலாலயம்,
திருநாகேஸ்வரம்.

**The Editor,**
**Sri Nrisimha priya,**
**Malolalayam,**
**Tirunagesvaram.**

Printed by J. Rangachariar, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvellore. Edited & Published by P. S. Srinivasa Desikachariar, No. 2. Audiappa mudali Street, Vepery, Mabras, 7.